திருவள்ளுவர் ஆண்டு 2040

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 52 பகுதி : 11 | செப் - 09 | விலை ரூ. 10/-



மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

# துணி

ஆறுவிரல் ஐம்பொறி

மானமெல்லாம் ஒரு கொட்டைக்குள்ளே – பருத்திக் கொட்டைக்குள்ளே. பருத்திச் செடியில் உள்ள காய் வெடிக்கும். பஞ்சு தோன்றும். அப்பஞ்சே நூலாகும். அந்நூலைத் தறியில் கோர்த்து நெய்வர். நீளமாக நெய்தபின் குறிப்பிட்ட நீளத்திற்கு அதை வெட்டுவார்கள். (துணிப்பார்கள்) வெட்டியதால் வெட்டிய பகுதியைத் துணி என்று கூறலாயினர். துணித்தல் என்ற சொல்லுக்கு வெட்டுதல் என்று பொருள்.

*கரி துணிபடும் (யானை துண்டுகளாக வெட்டப்படும்)* -க. பரணி - 411

*இரு துணி (இரண்டு துண்டுகள்)* -க. பரணி - 422

*துணிகள் பட (துண்டுகள் ஆகும்படி)* -க.பரணி -446

தறியிலிருந்து துணித்த துணியைத் தையலரிடம் கொடுத்து உடலுக்கு ஏற்றவாறு தைத்த பின் அத்துணி ஆடையாகிறது. அவ்வாடையை உடலின் மேல் படியும் படி உடுத்துகிறோம். உடலின் மேல் படிவதை ஆடை என்கிறோம். பாலின் மேல் படிவதையும் ஆடை என்கிறோம். பழத்தின் மேலாகப் படிந்திருக்கும் தோலையும் ஆடை என்கிறோம். ஆடை என்ற சொல்லுக்குப் பழத்தோல் என்ற பொருளும் உண்டு. துணியை உடுத்த முடியாது. ஆடையை உடுத்த முடியும். உடுக்கை, உடை, ஆடை என்ற இம்மூன்று சொற்களும் ஒரு பொருள் குறித்தனவே.

பழைய ஆடையைத் துண்டுதுண்டாகக் கிழித்து (துணித்து) சுத்தம் செய்வதற்குப் பயன்படுத்துகிறோம். இத்துணியைப் பழந்துணி என்றுதான் கூறுகிறோம்.

ஆங்கிலம் பேசுவோரும் துணிக்கும் ஆடைக்கும் இடையே உள்ள வேறுபாட்டைப் புலப்படுத்துகின்றனர். துணியைக் குறிக்கும் சொல்லின் இறுதியில் "E" என்ற எழுத்தைச் சேர்த்த சொல் ஆடையைக் குறிக்கும் என மொழிந்தனர்.

| | |
|---|---|
| CLOTH | துணி |
| CLOTHE | ஆடை |

இவ்விரு சொற்களுக்கும் இடையே ஒலி வேறுபாட்டையும் உணர்த்தினர்.

துணிக்கும் ஆடைக்கும் இடையே உள்ள வேறுபாட்டை அறிந்து தகுந்த இடத்தில் தகுந்த சொற்களைப் பயன்படுத்தி தமிழ் மொழி வளத்தைச் செம்மையாக்குவோமாக.

# செந்தமிழ்

(தோற்றம் 1902)

தொகுதி : 52
பகுதி : 11
செப் 2009

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு **2040**



வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |

முகவை மன்னர் **நா.குமரன் சேதுபதி**
தலைவர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

**ஆசிரியர்**

**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

# பொருளடக்கம்


**இதழ்மணம்** 3

**தமிழ்மொழிக் கல்வி மேம்பட** 4

பேராசிரியை வீ. ரேணுகாதேவி

**புலவோர் வாயில் பொய்யா மொழி** 13

-திரு. ஆதி. பாலசுந்தரன், தனிநிலை ஆய்வர்

**பள்ளியெழுச்சி-கிணையில் பிறந்த இலக்கியம்** 18

திரு. அ.கா. அழகர்சாமி, ஆய்வாளர்

**மொழிக்கொள்கையில்**
**தமிழகமும் தமிழ் வளர்ச்சியும்** 25

முனைவர் சு. குழந்தைவேல் பன்னீர்செல்வம்

**அன்பின் ஐந்திணை - முல்லை** திரு. வி. நாகசுந்தரம் 32

# இதழ் மணம்

வாசகர்களுக்கு வணக்கம்.

மொழி வளத்தைப் பாதுகாக்க குறிப்பு தரும் வகையில் ஆறுவிரல் ஐம்பொறி அவர்கள் 'துணி' என்ற சொல் குறித்து ஆங்கில மொழி ஒப்பீட்டோடு விளக்கம் செய்துள்ளார். மொழியியல் நோக்கில் தாய்மொழிக் கல்வி மேம்படுவதற்குச் சிறந்த ஆலோசனைகளை வழங்கியுள்ளார் பேராசிரியை வீ. ரேணுகாதேவி அவர்கள். புரவலர்கள் வேள்வி செய்தமையும், சாபத்தால் இந்திரன் காசநோய் பெற்றமையும் சாபம் நீங்கிய இடத்தில் இன்று காசநோய் மருத்துவமனை செயல்படுவதையும் சுட்டிக்காட்டி நுட்பமாக ஆராய்ந்துள்ளார் திரு. ஆதி.பாலசுந்தரன் அவர்கள். கிணை இசைத்து சூதர்கள் பாடிய பள்ளியெழுச்சியே பிற்காலத்தில் சிற்றிலக்கிய வளர்ச்சிக்கு வித்திட்டது என்பதை திரு.அ.கா. அழகர்சாமி ஆராய்ந்து வெளிக்காட்டியுள்ளார். அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியால் தமிழ் அடைந்துள்ள வளர்ச்சி குறித்தும் தமிழக மொழிக்கொள்கை குறித்தும் முனைவர் குழந்தைவேல் பன்னீர்செல்வம் அவர்கள் ஆராய்ந்துள்ள பாங்கு தமிழ் உணர்வை வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது. அன்பின் ஐந்திணையில் முல்லை பெறும் சிறப்பிடத்தைத் தம் கட்டுரை வாயிலாக திரு. வி. நாகசுந்தரம் ஓவியத்துடன் வெளிக்காட்டியுள்ளார்.

தமிழ்மொழியின் வளப்பத்திற்கு உறுதுணை வழங்கும் வகையில் இம்மாத இதழ் மலர்ந்து மணம் வீசட்டும்.

—முனைவர் க. சின்னப்பா

# தமிழ்மொழிக் கல்வி மேம்பட

பேராசிரியை வீ. ரேணுகாதேவி

மொழி என்பது மனித சமுதாயத்தின் முயற்சியால் உருவான ஒரு சிறப்பான ஊடகமாகும். ஒரு சிறந்த கருத்துப் பரிமாற்றத்திற்கான கருவி மொழியே ஆகும். மொழிதான் மனிதனையும் விலங்குகளையும் வேறுபடுத்துகின்றது. விலங்குகள் கூட வரையறைக்குட்பட்ட சில ஒலிகளை எழுப்பி தத்தம் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்கின்றன. ஆனால் அவற்றால் புதுவது புனைய இயலாது. மனிதனின் வளர்ச்சியில் மொழிக்கு முதன்மையான இடம் உண்டு. எனவே மனிதன் தான் பேசும் மொழியை வளர்ப்பதில் பெரிதும் ஆர்வம் காட்டுகிறான்.

ஒரு சமுதாயத்தைக் கட்டமைப்பது மொழியே ஆகும். மொழி வழியாகத்தான் தான் வாழும் சமுதாயத்தையும், பண்பாட்டையும் அடையாளப்படுத்துகிறான். மனிதன், தான் வாழும் சூழலிலிருந்தும், பள்ளிக்குச் சென்று கற்பதன் வழியாகவும் மொழித்திறனை வளர்த்துக் கொள்கிறான்.

தமிழ்நாட்டில் ஒரு குழந்தை வீட்டுச் சூழலிலிருந்து பெறும் மொழியும், பள்ளி சென்று கற்கும் மொழியும் வேறு வேறாக அமைந்துள்ளன. இதற்குக் காரணம் தமிழ் மொழி பேச்சுமொழி, எழுத்து மொழி என இரு வழக்குகளைக் கொண்டிருப்பது. இரு வழக்குகளையும் தேவைக்கேற்ப பயன்படுத்த கற்பிக்கும் கல்வி முறை நம்மிடையே இல்லை. அதுமட்டுமல்ல மொழிக் கல்விக்கு முதன்மையிடம் கொடுக்கச் சற்று சிந்திக்கவே செய்கின்றோம்.

மேலும், தாய்மொழி வழியே கல்வி கற்ற சப்பானியர்களும், சீனர்களும் அறிவியல் கண்டுபிடிப்புக்களிலும், தொழில் நுட்பங்களிலும் உலக அரங்கிலே சிறந்து விளங்கும்போது நாம் மட்டுமே ஆங்கில மோகத்திலே ஆழ்ந்து நம்மைப் பெற்ற தாய் தந்தையரைக் கூட அம்மா, அப்பா என்றழைக்க நாக்கூசி, வெட்கி மம்மி, டாடி என்றே அழைத்து மகிழ்கின்றோம். அண்டை மாநிலங்களில் கூட தாய்மொழிக் கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஊடகங்களின் பயன்பாட்டிலே உள்ள மொழி தமிழ் மொழியா என்பது கேள்விக்குரியதாகவே உள்ளது.

நிலையில் ஒரு மொழியை எழுதப் படிக்கக் கற்பதற்கான பயன்படுத்துவதற்கான கால அளவைக் குறைப்பதால் ஓர் இனத்திற்கு ஏற்படும் நன்மைகள் அளவிடற்கரியது. உயிர்மெய் இகர, ஈகார, உகர, ஊகார எழுத்துக்களுக்கு இங்கு கூறப்பட்டுள்ள மாற்றம் தொல்காப்பிய விதிகளுக்கோ, நன்னூல் விதிகளுக்கோ புறம்பானதன்று. அறிவியல் தொழில்நுட்பத் துறைகளில் உருவான கருவிகளையும் செய்முறைகளையும் சமுதாய பொருளாதார வாழ்வில் பயன்படுத்திக்கொள்ள மக்களுக்கு இருக்கும் திறமை வளரவேண்டும். இது நடைபெற அறிவியலும் தொழில்நுட்பமும் மக்களைச் சென்று அடைய மக்கள் பேசும் மொழியில் அவை இடம்பெற வேண்டும். எனவே அறிவியல் தமிழின் தேவை என்பது மொழிவளர்ச்சித்தேவை. தமிழின் வளர்ச்சிக்கான தேவை. மொழி வளர்ச்சியை இக்கோணத்தில் பார்த்தால் இனவளர்ச்சி மொழி வளர்ச்சிக்கு அடிப்படையாக அமையும்.

தமிழின் பயன்பாடு மிகுந்திட மிகுந்திட தமிழுக்கு மரியாதைவரும். தமிழின் பயன்பாட்டை வளர்க்காமல் தமிழைப் போற்றிப் புகழ்வதில் பயனில்லை. கவிஞர்கள் தங்களுடைய தாய்மொழி மீது அளவற்ற காதலும் பக்தியும் கொண்டவர்கள். இவர்களுள் பெரும்பாலோர் பண்டைய பெருமையைப் போற்றிக் கொண்டிருப்பார்களேயன்றி நிகழ்கால நிலையிலிருந்து வருங்காலத் தேவைகளுக்கு ஏற்ப மொழி மாற்றம் அமைய வேண்டுமென்றோ வளர்ச்சியடைய வேண்டுமென்றோ சிறிதும் எண்ணமாட்டார்கள். தமிழின் அளப்பரிய ஆற்றலையும் வளத்தையும் குலோத்துங்கன் உணர்ந்ததனால் அவர்பார்வை பக்திப் பார்வையில் அமையவில்லை. பக்திப்பார்வை ஒரு பக்கம் சாயத்தக்கது. குறை உணராதது. நடுநிலையைப் பேணாதது. குலோத்துங்கன் பகுத்தறிவுப் பார்வை கொண்டவர். அவர் நாளைய வளர்ச்சியை எண்ணி ஆழ்ந்துச்சிந்திப்பவர். அடிப்படையில் இவர் ஓர் அறிவியல் கவிஞராதலின் இவருடைய பார்வை வேறுபட்டதாக உள்ளது.

❖ ❖ ❖

கிளைமொழிகள் என்று சாதிக்குச் சாதி, இடத்திற்கு இடம், தொழிலுக்குத் தொழில் வேறுபட்டு மக்களால் பேசப்படுகின்றது. ஒரு குழந்தை பிறந்து வளர்ந்து முதன்முதலாக மொழியை அறிய முற்படுவது வீட்டுச் சூழலில் தான். எனவே தமிழ் நாட்டில் பிறக்கும் எல்லா குழந்தைகளுக்கும் முதன்மை மொழி வீட்டில் பேசப்படும் மொழிதான். இக்குழந்தைகள் பள்ளிக்குச் செல்லும் பொழுதுதான் எழுத்துத்தமிழைக் கற்க முற்படுகின்றனர். அவ்வாறு கற்க முற்படும்போது பேச்சுத் தமிழின் தாக்கத்தால் பல்வேறு இன்னல்களை எதிர்கொள்கின்றனர். எனவே அவர்களுக்கு எழுத்து மொழியைக் கற்பது இரண்டாம் மொழியைக் கற்பதைப் போன்ற சிக்கல்களைத் தோற்றுவிக்குகின்றது. கிளை மொழிகளுக்கிடையேயும் ஒலிநிலை, சொல்நிலை, இலக்கண நிலை, தொடர்நிலை ஆகியவற்றில் பல்வேறு வேறுபாடுகள் காணப்படுகின்றன.

பேச்சு மொழியில் லகரம், ளகரம், ழகரம் ஒலிகளுக்கிடையேயான ஒலிப்பு முறை வேறுபடுத்தப்படுவதில்லை. னகர, ணகர ஒலிகளும் ஒன்றாகவே ஒலிக்கப்படுகின்றன. ரகரமும், றகரமும் வேறுபடுத்தப்படுவதில்லை. இதன் காரணமாகவே கரியும், கறியும் ஒரே மாதிரியாக உச்சரிக்கப்பட்டு பொருள் மயக்கத்தை ஏற்படுத்துகின்றன. பள்ளியும், பல்லியும், அலகும், அழகும் உச்சரிப்பில் வேறுபடுத்தி ஒலிக்கப் பொறாமையால் அவை எழுத்திலும் பிரதிபலிக்கின்றன. பேச்சு மொழியில் வேறுபடுத்தி உச்சரிக்காவிட்டாலும் அவற்றின் பொருளை அறிந்து கொள்ளலாம். ஆனால் எழுத்தில் அதற்கு இடமில்லை. தவறு என்றே கொள்ளப்படுகின்றது. எழுத்துப்பிழைகள் மிகுவதற்குக் காரணமாக அமைகின்றது. அன்றாட வாழ்வில் 'குழந்தை', 'கொழந்த' என்றே உச்சரிக்கப்படுகின்றது. இத்தாக்கம் மாணவர்களின் எழுத்திலும் காணப்படுகின்றது. உச்சரிப்பில் மட்டுமில்லை தொடர்களும் மாறுபட்டே பயன்படுத்தப்படுகின்றன. காட்டாக, சென்னைத் தமிழில்

"அவன் வந்து கொண்டிருக்கிறான்" என்னும் தொடர் "அவ வந்துகினுக்கிறான்" என்றே பேசப்படுகின்றது. எனவே மாணவர்களுக்கு எது சரியான வாக்கியம் என்பதிலே குழப்பம் ஏற்படுகின்றது.

| எழுத்துமொழி | | பேச்சு மொழி |
|---|---|---|
| இருக்கிறது. | > | கீறது |
| பார்த்துக் கொண்டு | > | பார்த்துகினு |
| போகின்றான் | > | போறான் |
| பிடித்தது | > | புடிச்சது |
| போய்விடும் | > | பூடும் |
| பண்ணவேண்டும் | > | பண்ணனும் |
| ஆகிவிட்டது | > | ஆயிடுச்சு |
| காணவில்லை | > | காணோம் |

மாணவர்களுக்குப் பேச்சு மொழிதான் முதன்முதலில் கற்கும் மொழியாக அமைந்த காரணத்தால் அதன் தாக்கத்தை எழுத்திலும் காணமுடிகின்றது. அவை எழுத்து மொழியில் பிழைகள் எனக் கருதப்படுகின்றன. அது மட்டுமல்லாமல் இன்று புதினம், நாடகம், கடிதங்கள், சிறுகதைகள், மேடைப்பேச்சு என அனைத்து நிலைகளிலும் பேச்சுமொழியே பெரும்பான்மையும் பயன்படுத்தப்படுகின்ற காரணத்தால் இவற்றைப் படிக்கும் மாணவர்களுக்குக் கல்வி மொழியாம் எழுத்து மொழியைக் கற்பதிலும், எழுதுவதிலும் இடையூறுகள் ஏற்படுகின்றன. எனவே மாணவர்களின் மொழித்திறன் குறைந்துகொண்டே செல்கின்றது. வீட்டுச் சூழலிலும் சுற்றுச்சூழலிலும் பேச்சு மொழியை முதன் மொழியாகக் கற்கும் குழந்தைகள் பள்ளிக்குச் சென்று எழுத்துமொழியைக் கற்கும்போது பேச்சு மொழியின் தாக்கம் தவிர்க்க இயலாததாகின்றது. மொழி கற்பதிலும் எழுதுவதிலும் சிக்கல்கள் தோன்றுகின்றன. இதுவே மொழிக்கல்வியில் ஒரு பின்னடைவு ஏற்படக் காரணமாக அமைகின்றது.

இவ்வாறாக, பேச்சுமொழி கல்விமொழியை ஒரு முனையில் இருந்துகொண்டு தாக்க மற்றொரு முனையில் உலகமயமாதல் காரணமாக ஊடகங்கள் பயன்படுத்தும் தமிழ் மொழி ஆங்கிலம் கலந்த ஒரு கலப்பு மொழியாக உருவாகிக் கொண்டிருக்கிறது.

நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நம் வீட்டின் வரவேற்பறையில் சிம்மாசனம் இட்டு அமர்ந்திருப்பது தொலைக்காட்சிப் பெட்டி, நூல்கள் படிக்கும் பழக்கம் மெல்லக் குறைந்து மக்களின் பெரும்பான்மையான நேரத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் தொலைக்காட்சிகளில் வரும் தொகுப்பாளர்களும், பேட்டி கொடுப்பவர்களும், எடுப்பவர்களும் உச்சரிப்பைப் பற்றிக் கவலை கொள்வதில்லை. செம்மொழித் தமிழ் தனித் தன்மையை இழந்து, தமிழும் ஆங்கிலமும் கலந்த ஒருவகையான வியாபாரக் கலப்பு மொழியாக, பின்ஜின் ஆக உருவாவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகரித்துள்ளன.

*"என்னை நன்றாக இறைவன் படைத்தான்*
*தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"*

என்கிறது திருமூலரின் திருமந்திரம். ஆனால் இன்றைய நிலை,

*"அறிவியல் தொலைக்காட்சியைப் படைத்தது*
*மொழியை நன்கு கொலை செய்யுமாறே"*

என்பதாகவே உள்ளது.

தொலைக்காட்சியில் மக்கள் மொழியைப் பயன்படுத்துவதாக எண்ணிக் கொண்டு நான்கில் மூன்று ஆங்கிலச் சொற்களையும், ஒட்டுகளையும் கலந்து பயன்படுத்துகிறார்கள். ஒவ்வொரு மொழிக்கும் என்று தனியான பண்பாட்டுக் கூறுகளும், கட்டமைப்பும் உண்டு. அவ்வாறு இருந்தால்தான் அது தன்னை ஒரு தனிப்பட்ட மொழி என நிலை நாட்டிக் கொள்ள முடியும். ஆனால் தொலைக்காட்சிகளில் பயன்படுத்தப்படும் தமிழ்மொழி மெல்ல தன் தனித்தன்மையை இழந்து கொண்டிருக்கிறது.

சில நாட்களுக்கு முன்னர் செய்தி வாசிப்பவர் ஒருவர் அரசு கலைக்கல்லூரிகள் பல்கலைக்கழகங்களாக மாற்றப்படவுள்ளன என்னும் தொடரை அரசு களை கல்லூரிகள் பல் களை கலகங்களாக மாற்றப்படவுள்ளன என்று வாசித்த கொடுமையைக் கேட்க நேரிட்ட பொழுது வருங்காலத்தில் தமிழ்மொழியின் நிலை என்ன என்ற வினா மனத்துள் எழுந்தது.

தமிழ்மொழியின் அமைப்புப்படி மொழிக்கு முதலில் வரா மெய்யெழுத்துக்களைக் கொண்டு தொடங்கும் ராகம், லாரி, டப்பா, ராத்திரி, லைட், டைரி போன்ற சொற்கள் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன.

சொற்களுக்கிடையே எங்கே இடைவெளி விட வேண்டும் என்பதும் தெரிவதில்லை.

| | | |
|---|---|---|
| பரிசாகப் பெறுங்கள் | > | பரி # சாகப் பெறுங்கள் |
| காலடி | > | கால் # அடி |

சந்தி எங்கு பயன்படுத்துவது என்பதிலும் பெரும் குழப்பமே காணப்படுகின்றது. விளம்பரங்களுக்காக இடைவேளை வரும் பொழுது காண்பிக்கப்படும் இடைவேளைக்குப் பிறகு என்னும் தொடர்படும் பாடு. "கு" வேற்றுமை உருபுக்குப் பிறகு ஒற்று மிகும். பொதுவாகச் சொல்லிப் பார்க்கும்பொழுதே ஒற்று மிகுதல் நன்கு தெரியும். ஒரே தொலைக்காட்சியில் ஒரு சமயம் 'இடைவேளைக்குப் பிறகு', என்றும் மற்றொரு சமயம் 'இடைவேளைக்கு பிறகு' என்றும் காண்பிக்கப்படுகின்றது. அதே போன்றுதான் 'தமிழ்ப் புத்தாண்டு', 'தமிழ் புத்தாண்டு' என்று மாறி மாறி காண்பிக்கப்பட்டது. இன்றையச் சூழலில் இத்தகு குழப்பங்கள் மாணவர்களை மேலும் குழப்பமடையச் செய்யும்.

'வாரத்திற்கும்' என்பது 'வாரத்திற்க்கும்' என்றும் 'கணேஷ் வசந்த் நேயர்களுக்கு' என்பது 'கணேஷ் வசந்த நேயர்கலுக்கு' என்றும் 'கிரண்' என்பது 'கிரன்' என்றும் பிழைபடப் பயன்படுத்தப்படுகின்றது. ஆங்கில சொற்களை இவ்வாறு பிழைபட எழுதமுடியுமா ?

தமிழ் இயல்பாக எளிதாகக் கையாளப்படும் சொற்களுக்கும் மிகச் சிரமத்துடன் ஆங்கிலச் சொற்களைத் தமிழில் ஒலி பெயர்த்துக் கொடுக்கின்றனர்.

| | |
|---|---|
| தயாரிப்பு | புரொடக்ஷன், புரடக்ஷன் |
| உடைகள் | காஸ்ட்யூம்ஸ் |
| இயக்கம் | டைரக்ஷன் |

| | |
|---|---|
| இயக்குநர் | டைரக்டர் |
| ஒருங்கிணைப்பு | கோ ஆர்டினேஷன் |
| தலைப்பு | டைட்டில்ஸ் |
| கதை | ஸ்டோரி |
| படத்தொகுப்பு | எடிட்டிங் |
| ஒப்பனை | மேக்கப் |
| கலை | ஆர்ட் |

இவை தவிர ஆன் லைன் எடிட்டிங், ஆப் லைன் எடிட்டிங், போஸ்ட் புரொடக்ஷன், கிராபிக்ஸ், நான்–லினியர் எடிட்டிங், கிரியேட்டிங் ஹெட் போன்ற கலைச் சொற்கள் அப்படியே தமிழிலும் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றிற்கு இணையான தமிழ் கலைச்சொற்களை உருவாக்க முயற்சி செய்ய வேண்டும். அவ்வாறு புது கலைச்சொற்களை உருவாக்கும்பொழுதுதான் தமிழின் சொற்களஞ்சியம் விரிவடையும்.

மேலும் தமிழ் ஒட்டுகளை ஆங்கில வேர்ச் சொற்களுடன் கலந்து பயன்படுத்தப்படும் நிலையும் காணப்படுகிறது.

| | | |
|---|---|---|
| wife+ அ | > | ஒய்பா |
| base+ ம் | > | பேஸ்ம் |
| milkshake+ ம் | > | மில்க் ஷேக்ம் |
| program+ ஆக | > | புரோக்ராமாக |
| pumpset+ கள் | > | பம்பு செட்டுகள் |

தமிழ் வேர்ச் சொற்களுடன் ஆங்கில ஒட்டுகளை கலத்தலையும் காணமுடிகின்றது.

ஆதித்யா's கிச்சன்

மகளிர்'s

மலேசியா வாசுதேவன்'s சன்

ஆச்சி's மசாலா

தொடரியல் நிலையிலும் தொலைக்காட்சி

தொகுப்பாளர்களின் பேச்சில் மொழித்தாவலும் (code switching) மொழிக் கலத்தலும் அதிகம் (code mixing) காணப்படுகின்றது.

> ஏதாவது doubts இருக்கா
> rounds க்குப் போகலாமா ?
>
> அடுத்த topic உங்களுக்கு வந்து Internet
> chat பண்ணலாம் நிறைய friends கிடைக்கும்
> சிலபேர் limit தாண்டி பண்றாங்க
> you should avoid that
>
> இருக்க வேண்டியது தான்
> சிலர் go beyond their limit

மொழித்தாவலும், மொழிக் கலத்தலும் அதிகமாகும் பொழுது தமிழ் மொழியின் கட்டமைப்பு பெரிதும் சிதைந்து விடுகின்றது.

'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பது போன்று இங்கு கட்டப்பட்டவை ஒரு சில குறைபாடுகளே. ஊடக மொழிப் பயன்பாட்டில் களையப்பட வேண்டிய குறைபாடுகள் இவை போன்று ஏராளம்.

தொலைகாட்சியில் மட்டுமா ? வளர்ந்து வரும் அறிவியல் பற்றி எழுதும் போது தமிழும் ஆங்கிலமும் கலந்து எழுதும் நிலையே காணப்படுகின்றது.

> டெஸ்க்டாப்பில் இருக்கும் My Computer
> ஐக்கான் மீது இரட்டைக் கிளிக் செய்தால்
> மை கம்யூட்டர் ஃபோல்டரின் உள்ளடக்கம்
> விரியும். இரண்டு பாளங்கள் காட்சியளிக்கும்
> இடப்பக்கம் பாளத்தில் System Tasks,
> Other Places, Details ஆகியவை காணப்படும்.

(தினமணி, 27 மார்ச், 2005)

இந்தப்பகுதி எந்த மொழியில் எழுதப்பட்டது? தமிழ்மொழி அறிந்த அனைவருக்கும் புரியுமா என்பது ஐயமே.

இவ்வாறாகத் தமிழ் மொழிக் கல்வி ஒருமுனையில் பேச்சுமொழித் தாக்கத்தால் இடர்ப்பட்டு நிற்க, இன்னொரு

முனையில் உயர்நிலையில் ஆங்கிலக் கலப்பினால் அல்லல் பட்டுக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் இவ்விருமுனைத் தாக்குதலின் காரணமாகத் தமிழ் மொழியின் கட்டமைப்பு சிதைவுற்று பின்ஜின் என்னும் வணிக மொழியாக மாறாது என்பதற்கு என்ன உத்தரவாதம்?

இவ் இருவகை இடர்ப்பாடுகளிலிருந்து தமிழ்மொழி மீள வேண்டுமானால், தாய்மொழிக் கல்வி மேம்பட வேண்டுமானால் சில திட்டங்களை உடனடியாகச் செயல்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம்.

ஆரம்பக் கல்வியைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குக் கிளைமொழி பற்றிய அறிவினைக் கற்றுத் தர வேண்டும். ஒலிப்புப் பயிற்சியைச் சிறந்த மொழியியல் வல்லுநர்களைக் கொண்டு தரவேண்டும். அவற்றிற்கான புத்தொளிப் பயிற்சிகளை ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்குக் கட்டாயமாக்க வேண்டும்.

தொலைக்காட்சியில் பணிபுரிபவர்களுக்கும் ஒலிப்புப் பயிற்சியைப் புத்தொளி பயிற்சி வழியாக வழங்கலாம்.

ஆங்கிலச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச்சொற்கள் இருக்கும் பொழுது அவற்றையே பயன்படுத்த அறிவுறுத்தலாம்.

ஒரு குழுவினை அமைத்து பல புதிய கலைச் சொற்களை உடனுக்குடன் உருவாக்கித் தரச் செய்யலாம்.

மொழியின் கட்டமைப்பு சிதைந்து போய்விடாமல் பயன்படுத்த வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்காவிட்டாலும் அறிவுறுத்தலைச் செய்யலாம்.

பேச்சுமொழித்தாக்கம், ஆங்கில மொழிக் கலப்பு என்னும் இருமுனை தாக்குதல்களிலிருந்து விடுபட்டால் தான் தமிழ்மொழிக் கல்வி மேம்படும்; தமிழ்மொழி வளர்ச்சியடையும். அதற்கான புத்தொளிப் பயிற்சிகள் உடனே நடத்தப்பட வேண்டும். உயர்கல்விக்கான சிறப்புப் பாடங்களில் ஒன்றாக மொழியியலும் அறிவிக்கப்பட்டுள்ள இந்நிலையில் மொழியியல் கல்வியைப் புறம் தள்ளாது ஆக்கப்பூர்வ வளர்ச்சிக்குப் பயன்படுத்தினால் மொழிக்கல்வி மேம்படும்; தமிழ்மொழியின் தனித்தன்மை காப்பாற்றப்படும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

❖ ❖ ❖

# புலவோர் வாயில் பொய்யா மொழி

*திரு ஆதி. பாலசுந்தரன், தனிநிலை ஆய்வர்.*

தமிழகத்தில் ஆட்சி செய்து வந்த மன்னர்கள் வேள்வி இயற்றுவதில், காலத்துக்கு ஏற்றவாறு விருப்பம் கொண்டிருந்தனர் எனும் செய்தியைச் சங்க இலக்கியச் சில செய்யுள் பகுதிகளினின்றும் அறியலாம்.

வேள்வி இயற்றுவதால் வரும் மதிப்பையும், பெருமையையும் அவர்கள் விரும்பினர். இராயசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி என வேள்வி இயற்றிய பெருமையோடு அவர்களின் இயற்பெயர் துலங்கின.

பிற்கால மன்னர்களும் வேள்வி செய்ய விரும்பும் அளவு அவர்களையும் வேள்விப் பெருமை ஈர்த்தது. பல்லவ மன்னன் சிவஸ்கந்த வர்மன் தன்னை 'அக்னிஷ்டோம வாஜ பேய – அஸ்வமேதராஜ்' என்று செப்புப் பட்டயத்தில் பெருமையுடன் குறிப்பிட்டுக் கொள்கின்றான்.

கானகத்தில் வேள்வி இயற்றுவதற்காக முனிவர்களுக்கு எல்லா உதவிகளையும் செய்து உதவிய மன்னர்கள் அவ்வாறு உதவி செய்வதைக் காலபோக்கில் நிறுத்திவிட்டனர். வேள்வி இயற்றும் அதிகாரம் உடைய பார்ப்பனர்களையும், புரோகிதர்களையும் தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் மெல்ல மெல்லக் கொண்டு வந்தனர்.

"யாகம் வெற்றிகரமாக முடிய ரிஷிய சிருங்கரைக் காட்டிலிருந்து அழைக்க வேண்டும். அதற்கு உபாயம் என்னவென்றால், 'தாங்கள் ரூபாவதிகளுக்கு வஸ்திரங்கள், ஆபரணங்கள் வெகுமானமாகக் கொடுத்து அனுப்புங்கள். அவர்கள் எல்லா விதத்தாலும் அந்த ரிஷியை அழைத்து வருவார்கள்' என்று சுமந்தர் சொல்லுகின்றார் . . .

. . . ரூபாவதிகளின் பின்னால் ரிஷிய சிருங்கர் அங்க தேசத்துக்குச் சென்றார்".

இவ்வாறு வால்மீகி ராமாயணம் கூறுகிறது. இச்சான்றிலிருந்து வேள்வி இயற்றும் அதிகாரம் உடையவர்களைக்

காலப்போக்கில் மன்னர்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து விட்டனர் என்பது உறுதியாகிறது. அவர்களைத் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து வேள்வி செய்தனர். அவர்களுக்கு நிவந்தங்களை வழங்கினார்கள்.

இவ்வாறு சொல்வது வரலாற்று முறைமைப் படியும் பொருத்தமாகிறது. ஜடிலவர்ம பாண்டியனின் முன்னோன் முதுகுடுமி என்பான், மலர்ச் சோலைப் பாகனூர்க் கூற்றத்தில்–சோழவந்தான் பகுதியில்–வையை ஆற்றங்கரையில் வேள்வி செய்வித்தான் என்று சின்னமனூர்ச் செப்பேடு கூறுகிறது.

முதுகுடுமிப் பாண்டிய மன்னன், நற்கொற்றன் என்பவனைத் தலைவனாகக் கொண்ட வேதியர்கள் உதவியுடன் யாகத்தை நடத்தியதற்குத் தட்சணையாக நற்கொற்றனுக்கு வழங்கிய பகுதியே வேள்விக்குடி என்று வேள்விக்குடிச் செப்பேடு கூறுகிறது.

முனிவர்கள் வேள்வியைச் செய்வதற்கு உதவி செய்த மன்னர்கள், அம்முறையினின்றும் மாறுபட்டு தாங்களே நேரிடையாக வேள்வி செய்ய விரும்பினர் என்பதும், யாகம் செய்யும் பார்ப்பனர்களைத் தங்களின் ஆட்சி எல்லைக்குள் கொண்டுவந்து வேள்வி செய்வித்தனர் என்பதும் இச்சான்றுகளால் தெரிய வருகின்றன.

வேள்வி இயற்றும் மன்னர்கள் வேள்விக்குரிய விதிமுறைகளைத் தக்கவர்களிடம் வினவித் தெளிவு பெற்றனர். "கேள்வி கேட்டுப் படிவம் ஒடியாது வேள்வி வேட்டனை" (பதிற்று. பதிகம்.8/74). 'கேள்வி கேட்டல் என்பது, வேள்வி இயற்றுவதற்கு ஆதாரமான விதி கேட்டல்'...

'... படிவம் – யாகம் பண்ணுவதற்கு, உடலாக முன்பு செலுத்தும் விரதங்கள் –' எனப் பதிற்றுப் பத்து பழைய உரை கூறுகிறது.

விரதம் மேற்கொண்டு வேள்வி செய்வதற்கேற்ற வகையில் மன்னர்கள், நன்பகல் பலவுடன் உணவை ஒழித்தவராய், செற்றம் நீக்கிய மனத்தவராய், காமமும் நீத்துத் தமது உடம்பை ஆயத்தப்படுத்திக் கொண்டனர்.

மான் தோலாடை புனைந்து, தன் மனைவியையும் தன் அருகில் வேள்விச் சாலையில் அமர்த்திக் கொண்டான். மன்னனின் மனைவி 'சாலகம்' என்னும் உடையை வேள்வி சமயத்தில் அணிந்திருப்பாள்.

சங்க கால மன்னர்களில் சிலர் வேத வேள்வி நெறிகளில் தெளிவு பெற முயன்றனர்.

"ஒகந்தூர் ஈத்துப் புரோசு மயக்கி" (பதிற்றுப் பத்து பதிகம் 7) – 'புரோசு மயக்கி – தன் புரோகிதனிலும் தான் அறநெறி அறிந்து – எனச் செல்வக் கடுங்கோ வாழியாதன் என்னும் மன்னன், வேத நெறிகளில் வல்லுநனாகத் திகழ்ந்தான்...' எனப் பதிற்றுப் பத்து பழைய உரையாசிரியர் கூறுகின்றார். புரோசுமயக்கி எனக் கபிலர் கூறும் தொடருக்குப் பழைய உரையாசிரியர் தரும் விளக்கம் இது.

வேள்வி இயற்றும் அதிகாரியான புரோகிதனைக் காட்டிலும் சங்க கால மன்னர்கள் சிலர் வேள்வி நெறிகளில் சிறந்து விளங்கினர். அத்துடன் அமையாது, தங்கள் அமைச்சர்களும் வேள்வி நெறிகளில் சிறந்து விளங்கிட வேண்டும் என்று அரசர் விரும்பினர்.

*"அமைச்சியல் மையூர் கிழானைப்*
*புரையறு வேள்விப் புரோசு மயக்கி"*

(பதிற்றுப் பத்து பதிகம்.7) – அம்மையூர் கிழானைப் புரோகிதனினும் அறநெறி அறிவானாகப் பண்ணி ... என்று பதிற்றுப் பத்து பழைய உரை கூறுகிறது.

சேர மன்னன் குடக்கோ இளஞ் சேரல் இரும்பொறை தன் அமைச்சன் மையூர்கிழானை வேள்வி நெறிகளில் வல்லவனாக ஆக்கினான்.

"குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை அறவேள்வி ஒன்று செய்தான். பல நாடுகளில் இருந்தும் சான்றோர் பலர் வந்திருந்தனர். அவ்வேள்வியை அவனுடைய அமைச்சருள் ஒருவனான மையூர் கிழான் என்பான் முன்னின்று நடத்தினான். வேள்வி ஆசானாகிய புரோகிதன் முறையே சடங்குகளைச் செய்து வருகையில் தவறொன்றைச் செய்து விட்டான்.

மையூர்கிழான் அதனை எடுத்துக்காட்டினான். அது குறித்துச் சொற்போரும் ஆராய்ச்சியும் நடந்தன. மையூர்கிழான் கூறுவதே சிறந்ததாக முடிவாயினமையின் அவனையே வேள்வி ஆசானாய் இருந்து வேள்வியை முடிக்குமாறு வேந்தன் ஆணையிட்டான்."

எனவே, இச்சான்றிலிருந்து அரசன் விரும்பிய விதமே அமைச்சன் வேத வேள்வி விதிகளில் வல்லுநன் ஆகிவிட்ட செய்தி தெரிய வருகிறது.

குமரி மாவட்டம் திருவட்டாறு தலத்தில் ஆதிகேசவப் பெருமாள் கோயில் அமைந்துள்ளது.

"இக்கோயிலில் கருவறைக்கு எதிரே ஒற்றைக் கல் மண்டபம் – ஒரே கல்லால் ஆன மண்டபம் இருக்கிறது. அதன் தென்மேற்கே திருமுற்றத்தில் ஒரு மேடையில் நான்கு வேதமூர்த்திகள் உள்ளனர் சிலை வடிவில். இந்த இடத்தில் பெரிய யாகங்கள் செய்யப்படும். எதிரிடையான கருத்தைத் தவறு எனக் காட்டி, திருவாங்கூர் யாக பூமியாக விளங்கியது என்பதற்கு இது ஒரு சான்றாகும்" எனச் சேர அரசர் மரபில் வந்தவர் எனக் கூறிக் கொள்ளும் அரசியாரே கூறுகின்றார். (Thulsi Garland - Princess Gowri Lakshmi Bhai)

கோயிலோடு சார்ந்த இவ் வரலாற்றுக் குறிப்புச் சான்று, பதிற்றுப் பத்து இலக்கியக்கூற்று மெய்ம்மையே என்பதற்கு அரணாகிறது.

இந்திரன் செய்த தவறொன்றால், அவனுக்குக் காச நோய் ஏற்படுமாறு சாபம் கொடுக்கப்படுகிறது. தன்னைத் தொற்றிய காசநோய் தீருமாறு திருப்பரங்குன்றத்து முருகப் பெருமானை இந்திரன் இறைஞ்சுகின்றான்.

திருப்பரங்குன்றத்துக்கு வடமேற்கே ஒரு காவதத் தொலைவில், தீர்த்தக்குளம் ஒன்று உள்ளது. அதில் முழுகி எழுக உனது காச நோய் நீங்கும் என முருகப் பெருமான் அருளுகின்றான்.

அவ்வாறே அக்குளத்திற்குச் சென்று நீராடிய இந்திரன் காசநோய் நீங்கப் பெறுகிறான்.

நிரம்ப அழகிய தேசிகர் பாடிய திருப்பரங்குன்றத் தல புராணத்தில், இந்திரன் சாப விமோசனப் படலத்தில் இச் செய்தி கூறப்படுகிறது.

இவ்விலக்கியச் செய்திக்கு அரண் சேர்ப்பது போல், தேசிகர் தம் நூலில் சுட்டிய ஏறத்தாழ அதே இடத்தில் – திருப்பரங்குன்றத்துக்கு வடமேற்கே சற்றுத் தொலைவில் – ஆஸ்டின்பட்டி என்னும் புதுப் பெயர்கொண்ட இடம் அமைந்துள்ளது. அங்கே காச நோயை நீக்கும் மருத்துவமனை அமைத்துள்ளனர்.

காசநோய் போக்கும் மருத்துவமனை அமைக்கவேண்டுமாயின் அதற்கு ஏற்ற சுற்றுச் சூழல், தூய காற்று, தூய நீர் வசதி, அமைவிடசூழல் ஆகியன அமைதல் வேண்டும். இவை இன்றியமையாதன.

புல்லின் அணுவளவு கூறுகூட இல்லாத இடத்தில் புல் தோன்றாது என்பது தருக்க வாதம்.

எனவே, காச நோயை நீக்கும் சிறிய அளவு கூறாவது அவ்விடத்தில் ஏற்கனவே அமைந்திருத்தல் வேண்டும். அவ்விடத்தை ஆராய்ந்து நன்கு தெரிவு செய்தே மருத்துவமனையை அமைத்துள்ளனர்.

புலவர் கூறியதற்கும், ஆங்கு அம்மருத்துவமனை அமைந்தமைக்கும் சரியான பொருத்தம் அமைந்துள்ளது.

இவை இலக்கியச் செய்திகளுக்குப் புறச் சான்றுகள்.

கட்டுரைக்கு உதவியவை

1. பதிற்றுப் பத்து
2. ஔவை துரை சாமிப்பிள்ளை – சேர மன்னர் வரலாறு
3. சி.ஆர்.சீநிவாசய்யங்கார் – வால்மீகி ராமாயணம் – மொழிபெயர்ப்பு

❖ ❖ ❖

# பள்ளியெழுச்சி-கிணையில் பிறந்த இலக்கியம்

*ஆய்வாளர் அ.கா.அழகர்சாமி*

சங்ககால இனக்குழுச் சமூகத்தில் வாழ்ந்த கூத்தர், பாணர், பொருநர், விறலி போன்றோர்கள் கையளித்த கொடையே இன்று நாம் பயன்படுத்தும் செவ்வியல் இசையும், நடனமும் ஆகும். இவர்கள் தமிழ்ச் செவ்வியல் மரபிற்கு இசை, நடனம் போன்றவை மட்டுமின்றி ஆற்றுப்படை போன்ற இலக்கிய வகைகளையும் வழங்கியுள்ளனர். அந்த வகையில் இந்த நாடோடிக் கலைஞர்கள் தமிழ்ச் செவ்வியல் மரபிற்கு வழங்கிய மற்றுமொரு கொடை பள்ளியெழுச்சிப் பாடல்களாகும். இன்று திருப்பள்ளியெழுச்சி என்று அழைக்கப்படும் இந்த இலக்கிய வகையின் சில ஊற்று பொருநரின் கிணைப் பறையிலிருந்தே பிறக்கின்றது.

புறநானூற்றில் கிணைப்பொருநன் கூற்றிலமைந்த பல பாடல்களைக் காணமுடிகின்றது. இந்தக் கிணைப் பொருநர்கள் அதிகாலையில் எழுந்து, கிணைப் பறையை முழக்கிக் கொண்டு, அரண்மனை முற்றம் சென்று, பள்ளியெழுச்சி பாடி, மன்னனைத் துயிலெழுப்பிப் பரிசில் பெறும் பழக்கத்தை வழக்கமாகக் கொண்டு வாழ்ந்தவர்கள். இவர்களின் இந்தத் துயிலெழுப்பும் பாடல் கிணைப் பறையொடு இசைக்கப் பெறும் இசைப் பாடல் சார்ந்த வாய்மொழி வகையினதாகும். பொருநர்களின் இந்த இசைப்பாடல் மரபில் மனதைப் பறிகொடுத்த சங்க காலப் புலவர்கள், அதற்கு இலக்கிய வடிவம் தந்து, அதனைப் போலவே தங்கள் பாடல்களையும் கிணைப் பொருநன் கூற்றிலமைத்துப் பாடியுள்ளனர். இந்தப் பாடல்களைப் புறநானூற்றில் பிற்பகுதியில் காணமுடிகின்றது. வெள்ளி முளைத்த விடியலில் சென்ற பொருநர்கள், கிணைப்பறையை முழக்கிக் கொண்டு, அரண்மனை முற்றம் சென்று, மன்னனைப் பாடிப் பரிசில் பெறுவது போல அமைவது இப்பாடல்களின் பொதுத் தன்மையாகும். இந்தக் கூறுகளை அப்படியே பிரதியாக்கம் செய்து கொண்டு, பின்னாளில் பள்ளியெழுச்சிப் பாடல்கள் தோன்றுவதைக் காணமுடிகின்றது.

இனி இந்தப் பள்ளியெழுச்சிப் பாடல்கள் எவ்விதம் தோன்றின? இதன்மூல ஊற்று எதுவெனப் பார்க்கும்பொழுது,

இதற்கான மூலத்தைத் தொல்காப்பியத்தில் நாம் கண்டடைய முடிகிறது.

*"தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்*
*சூதர் ஏத்திய துயிலெடை நிலையும்"*

(தொல், பொருள் புறத்.நூ.30)

என்று பாடாண்திணைத் துறைகளுள் ஒன்றாகத் துயிலெடை நிலைத் துறை என்ற ஒன்றைக் குறிப்பிடுகின்றது தொல்காப்பியம். இந்தத் துயிலெடைப் பாடலகளே புறநானூற்றில் சான்றுப் பாடல்களைப் பெற்று, பக்தி இயக்கக் காலத்தில் பள்ளியெழுச்சியாக மலர்கிறது.

இந்தத் துயிலெடை நிலைப் பாடல்களைப் பாடியோர் பொருநர்கள் என்பதனைப் புறநானூற்றுப் பாடல்கள் மூலம் அறியமுடிகின்றது. ஆனால் மேலே நாம் பார்த்த தொல்காப்பிய நூற்பா துயிலெடைப் பாடல்களைப் பாடியவர்களைச் சூதர் என்று குறிப்பிடுகின்றது. எனவே துயிலெடைப் பாடல்களைப் பாடியவர்களை இருவகையினராகக் கொள்ள நேர்கிறது. முதல் வகையினர் புறநானூறு குறிப்பிடும் பொருநர்கள், இரண்டாம் வகையினர் தொல்காப்பியம் குறிப்பிடும் சூதர். மேலே நாம் பார்த்த தொல்காப்பிய நூற்பாவிற்கு உரை வகுத்த இளம்பூரணர், "கிடந்தோர்க்குக் கேடு இல்லாத நற்புகழைப் பொருத்த வேண்டிச் சூதர் ஏத்திய துயில் எடை நிலையும்" (மு. சண்முகம் பிள்ளை (ப.ஆ) தொல். பொருள். ப. 162) என்கிறார். இதே நூற்பாவிற்கு உரை வகுத்த நச்சினார்க்கினியர், தமது வலியாலே பாசறைக்கண் ஒரு மனக்கவற்சியின்றித் துயின்ற அரசர்க்கு நல்ல புகழைக் கொடுத்தலைக் கருதிய சூதர் அத்துயிலெடுப்பின் ஏத்தின துயிலெடை நிலையும். மேலும் அவர் துயிலெடுப்புத் தொன்று தொட்டு வருமென்பதும், சூதர், மாகதர், வேதாளிகர், வந்திகர் முதலாயினோருட் சூதரே இங்ஙனம் வீரத்தால் துயின்றாரைத் துயிலெழுப்புவரென்பதும், யாண்டும் முன்னுள்ளோரையும் பிறரையும் கூறப்படுமென்பதும் கொள்க (நச்சினார்க்கினியர் (உ.ஆ), தொல்,பொருள். ப.281) என்கிறார். எனவே இளம்பூரணரும், நச்சினார்கினியரும் 'சூதரே' துயிலெழுப்பியவர்கள் என்று கூறுதலைக் காணமுடிகின்றது. துயிலெடைநிலைக்கு இலக்கணம் கூறும் பன்னிரு பாட்டியல், பிரபந்த தீபிகை போன்ற பாட்டியல் நூல்களும் 'சூதரே' துயிலெழுப்பியவர்கள் என்கின்றன.

சிலப்பதிகாரம் சூதர், மாகதர், வேதாளிகர் (சிலம்பு 5:48) போன்றோர்களுக்குத் தனித்தனி இருக்கைகள் இருந்ததாகக் குறிப்பிடுகின்றது. இதற்கு விளக்கம் தரும் அடியார்க்கு நல்லார் சூதர்–நின்றேத்துவோர், மாகதர்–இருந்தேத்துவோர் என்கிறார். எனவே சூதர்கள் தனியாக இருப்பிடம் அமைத்து நிலையாக வாழ்ந்ததைச் சிலப்பதிகாரம் குறிப்பிடுவதால், அவர்கள் தொழில்முறைக் கலைஞர்களாகத் துயிலெடைப் பாடல்களைப் பாடியவர்களாயிருக்கலாம். பொருநர்கள் நாடோடி இனக்குழுவினராய் அரண்மனை, பாசறை போன்ற இடங்களுக்குச் சென்று துயிலெடைப் பாடல்களைப் பாடியவர்களாக இருக்கலாம். மேலும் ஆற்றுப்படை நூல்களில் பொருநராற்றுப் படையில் மட்டுமே பொருநர் விடியல் காலத்தில் அரண்மனை முற்றம் சென்று துயிலெழுப்பிப்பாடும் முறையினைக் (பொருநர்.69–74) காணமுடிகின்றது. எனவே துயிலெடைநிலை என்ற வாய்மொழிப் பாடல்களை நாடுதோறும் எடுத்துச் சென்று இசையோடு பரப்பியவர்கள் பொருநர்களே என்ற முடிவுக்கு வரலாம்.

இந்தத் துயிலெடைப் பாடல்களுக்கான சான்றுப் பாடலை அதாவது பள்ளியெழுச்சிப் பாடல்களின் வளர்ச்சிக் கூறுகளைப் புறநானூற்றுப் பாடல்களில் நாம் காணமுடிகின்றது. புறநானூற்றின் பிற்பகுதிகளில் அமைந்துள்ள கிணைப் பொருநன் கூற்றிலமைந்த பாடல்களே துயிலெடைப் பாடல்களுக்குரிய சான்றுப் பாடல்களாகும். இந்தப் பாடல்கள் அனைத்தும் அமைப்பில் ஒத்தனவாய் பிற்காலப் பள்ளியெழுச்சிகளை நினைவுபடுத்துவனாய் உள்ளன. கிணைப் பொருநன் கூற்றிலமைத்துப் பாடப்பட்ட எருக்காடூர்த் தாயங்கண்ணனாரின் துயிலெடைநிலைப் பாடலொன்று பிற்காலப் பள்ளியெழுச்சிப் பாடல்களின் வளர்ச்சி நிலையினை நினைவுபடுத்துவதாய் உள்ளது.

> **"வெள்ளியும் இருவிசும் பேர்தரும் புள்ளும்**
> **உயர்சினைக் குடம்பைக் குரல் தோற்றினவே**
> **பொய்கையும் போது கண் விழித்தன பையச்**
> **சுடரும் சுருங்கின்று ஒளியே பாடெழுந்து**
> **இரங்கு குரன் முரசமொடு வலம்புரி ஆர்ப்ப**
> **இரவுப் புறங்கண்ட காலைத் தோன்றி**
> **எஃகிருள் அகற்றும் ஏமப் பாசறை**

*வைகறை அரவங் கேளியர் பலகோட்*
*செய்தார் மார்ப எழுமதி துயிலெனத்*
*தெண்கண் மாக்கிணை தெளிர்ப்ப வொற்றி*
*நெடுங்கடைத் தோன்றியேனே. (புறம் 397)"*

என்றிருக்கிறது அந்தப் பாடல். நமக்குக் கிடைக்கின்ற பாடல்களில் பிற்காலப் பள்ளியெழுச்சிப் பாட்டின் சாயலை முழுமையாகக் கொண்டது இந்த ஒரு பாடலே ஆகும். இப்பாடலில் பறவைகள் ஒலி எழுப்புதல், பொய்கைகளில் மலர்கள் மலர்தல், பாசறையின் நிலை போன்ற விடியற்கால நிகழ்வுகளைச் சொல்லி முடிவில் பலகோட் செய்தார் மார்ப எழுமதி துயிலென துயிலெழுப்புதலைக் காணமுடிகின்றது. இதில் வரும் எழுமதி துயில் என்பது பின்னாளைய பள்ளியெழுச்சிகளில் பள்ளியெழுந்தருளாயே என்ற முடிபாக மாற்றம் பெறுதலைக் காணமுடிகின்றது. மேலும் இப்பாடலில் வரும் தெண்கண் மாக்கிணை தெளிர்ப்ப வொற்றி என்ற வரி இது இசையுடன் பாடப்பெறும் வடிவம் என்பதனைக் காட்டி நிற்கின்றது. அரிக்கூடு மாக்கிணை இரிய வொற்றி (புறம் 378), ஒரு கண் மாக்கிணை தெளிர்ப்ப வொற்றி (புறம் 394) போன்ற வரிகளும் மேற்சொன்னதையே உறுதிப்படுத்துகின்றன.

கிணைப்பொருநன் கூற்றிலமைந்த சேரமான் வஞ்சனைத் திருத்தாமனாரின் பாடலொன்று (புறம் 398) பள்ளியெழுச்சிக் கூறுகளை இன்னும் விளக்கப்படுத்திக் கூறுவதாய் அமைந்துள்ளது. திங்களாகிய நிலவொளி மறைய, வெள்ளி எழுந்து விளங்க, அரண்மனை முன்பு சேவல் விடியலின் வரவறிந்து கூவ, பொய்கைகளில் மலர்கள் மலர, பாணர்கள் தம் கை யாழை முறைப்படி இயக்க, இரவுப் பொழுது கழியும் விடியற்காலத்தே சென்று, சேரமான் வஞ்சனைப் பாணனொருவன் பாடியதாக அந்தப் பாடல் அமைகின்றது. எனவே இசை முழக்குதல், விடியல் வர்ணனை, தலைவனின் புகழைப் பாடுதல், துயிலெழுவாய் எனத் துயிலெழுப்புதல் போன்ற பள்ளியெழுச்சிக் கூறுகளின் வளர்ச்சி நிலைகளை இந்தப் பாடல்கள் நமக்குக் காட்டுவதை உணரலாம்.

இவ்வாறு தொல்காப்பியத்தில் துயிலெடைப் பாடல்கள் எனச் சுட்டுப்பட்டு, புறநானூற்றுப் பாடல்களில் சான்றுப் பாடல்களைப் பெற்ற பள்ளியெழுச்சிப் பாடல்கள், பக்தி இயக்கக் காலத்திலேயே

தனித்த இலக்கிய வகையாக மலர்கின்றன. துயிலெடைநிலைப் பாடல்களுக்கு முதன்முதலில் இலக்கிய வடிவம் கொடுத்தவராகத் தொண்டரடிப் பொடியாழ்வார் அறியப்படுகின்றார். அடுத்ததாக மாணிக்கவாசகர் வருகிறார். இருவரின் காலங்களுக்குமிடையே அதிக வித்தியாசமில்லை என்றாலும், தொண்டரடிப் பொடியாழ்வாரின் காலம் முற்பட்டதாகையால் பள்ளியெழுச்சிக்கு வடிவம் கொடுத்த பெருமை தொண்டரடிப் பொடியாழ்வாரையே சேர்கின்றது.

மன்னர்களைத் துயிலெழுப்பிய அந்த இசைப்பாடல் வகையானது இறைவனுக்கும் அப்படியே பொருந்திப் போய்விடுகின்றது. தொண்டரடிப்பொடியாழ்வார் இதனைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளார். அவரின் பள்ளியெழுச்சிப் பாடல்கள் மூலத் துயிலெடைநிலைப் பாடல்களுக்கு மிகவும் நெருக்கத்தில் வருகின்றன. மாணிக்கவாசகர் பள்ளியெழுச்சியில் தத்துவக் கண்ணோட்டம் மிகுந்து காணப்படுகின்றது.

***"கதிரவன் குணதிசைக் சிகரம்வந்து அணைந்தான்***
***கனையிருள் அகன்றது காலைஅம் பொழுதாய்***
***மதுவிரிந்து ஒழுகின மாமலர்கள் எல்லாம்***
***வானவர் அரசர்கள் வந்து வந்து ஈண்டி***
***எதிர்திசை நிறைந்தனர் இவரொடும் புகுந்த***
***இருங்களிற்று ஈட்டமும் பிடியொடு முரசும்***
***அதிர்தலில் அலைகடல் போன்றுளது எங்கும்***
***அரங்கத்து அம்மா பள்ளியெழுந்து அருளாயே."***

**(தொண்டர். திருப்பள்ளி பா. 1)**

என்று தொண்டரடிப் பொடியாழ்வாரின் பள்ளியெழுச்சிப் பாடல் விடியல் வர்ணனை, மலர்கள் மலர்தல், முரசறைதல், தேவர்கள் வருதல் போன்றனவற்றால் பழைய துயிலெடைநிலைப் பாட்டிற்கு மிகவும் நெருக்கத்தில் வருவதனைக் காணமுடிகின்றது. ஆழ்வார்களும் நாயன்மார்களும் உருவாக்கிய பக்தி இயக்கம் மூலம், சைவமும் வைணவமும் புத்துயிர் கொண்ட போது இசையே அந்த மறுமலர்ச்சிக்குரிய முக்கிய ஊடகமாக இருந்தது என்கிறார் ஷாஜி. (உயிர்மை 39, நவ. 2006, ப. 47). எனவே பொருநர்களின் பாடல்களிலுள்ள இசைத்தன்மை இறைவனுக்குச் சரியாகப்

பொருந்திப் போய்விடுகின்றது. இதனை உணர்ந்து கொண்ட தொண்டரடிப் பொடியாழ்வார், அதனைப் பள்ளியெழுச்சி என்ற இறைவனைப் பாடும் தனித்த இலக்கிய வகையாக மாற்றி விடுகின்றார். எனவே பள்ளியெழுச்சி என்ற இலக்கிய வடிவம் மிகப்பெறும் வெற்றியைப் பெற்று விடுகின்றது. அது கடல் கடந்து தாய்லாந்து, சயாம் போன்ற நாடுகளில் பரவியிருப்பதற்கு அதன் இசைத்தன்மையே காரணமாகும்.

பள்ளியெழுச்சிப் பாடல்களின் அடுத்த கட்ட வளர்ச்சி நிலையினைக் கி.பி. பதினான்காம் நூற்றாண்டுக்குப் பிறகே பார்க்கமுடிகின்றது.

இக்காலகட்டத்தில் தமிழகத்தில் தத்துவத் தேடல் மிகுந்திருந்ததால், இப்பள்ளியெழுச்சிகளும் தத்துவக் கருத்துக்களைக் கொண்டனவாக உள்ளன. அந்த வகையில் தத்துவராயர் மட்டும் ஐந்து திருப்பள்ளியெழுச்சிகளைப் பாடியுள்ளார். இவை தவிர்த்து சாதுஓம் என்பவரும், முருகனாரும் ரமணர் மீது பள்ளியெழுச்சி பாடியுள்ளனர். துறைமங்கலம் சிவப்பிரகாசர் தம் ஞானாசிரியர் மீது சிவஞான பாலைய சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சியைப் பாடியுள்ளார். இவை பெரும்பாலும் ஞானாசிரியர்கள் மீது பாடப்பட்டனவாக உள்ளன. இறைவனின் புகழைப்பாட உருப்பெற்ற பள்ளியெழுச்சி இங்கு தத்துவக் கருத்துக்களைப் பெற்று வளர்ச்சியடைதலைப் பார்க்க முடிகின்றது.

நவீன காலத்திலும் பள்ளியெழுச்சிகளின் வளர்ச்சி தொடர்வதைக் காண முடிகின்றது. இருபதாம் நூற்றாண்டில் பாரதி, **பாரத மாதா திருப்பள்ளியெழுச்சி**யைப் பாடியுள்ளார். இதில் துயிலெழுதல் என்பது சமூக விழிப்புணர்வாக மாற்றம் பெற்றுள்ளது.

**பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால்**
**புன்மை இருட்கணம் போயின யாவும்**
**எழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவி**
**எழுந்து விளங்கியது அறிவெனும் இரவி**
**தொழுதுனை வாழ்த்தி வணங்குதற் கிங்குன்**
**தொண்டர் பல்லாயிரற் சூழ்ந்து நிற்கின்றோம்.**

*விழி துயில்கின்றனை இன்னுமெந் தாயே*
*வியப்பிதுகாண் பள்ளியெழுந்தருளாயே*

**(பாரதியார், பாரதமாதா திருப். பா. 1)**

பாரதியின் பாரதமாதா திருப்பள்ளியெழுச்சியின் முதல் பாடலே இவ்வாறு எழுச்சியுடன் அமைந்துள்ளது. விடுதலைப் போராட்டக் கனலை உள்வாங்கிக்கொண்டு, இப்பாடல் தேசிய விடுதலையை வேண்டி நிற்கிறது.

இதனைத் தொடர்ந்து தமிழ்த் தேசிய எழுச்சியின் ஒரு பகுதியாகத் தமிழ்த்தாய் திருப்பள்ளியெழுச்சிகளும் தோன்றியுள்ளன. ஆ.சிவலிங்கனார், அ.மு.பரமசிவானந்தம், சோமசுந்தரம் பிள்ளை போன்றோர் தமிழ்த்தாய் திருப்பள்ளியெழுச்சிகளைப் பாடியுள்ளனர். அ.கி.பரந்தாமனார் தமிழ்ப் பெருந்தேவி திருப்பள்ளியெழுச்சி பாடியுள்ளார். இவை பெரும்பாலும் தமிழின் வளம், சிறப்பு, பிறமொழி ஆதிக்க எதிர்ப்பு போன்றவற்றை மையக் கருத்தாகக் கொண்டுள்ளன.

*"பன்னிய புறமொழி விழைவேனுங் கங்குல்*
*பையப்பைய விடிந்தது படரொளி பரப்பி—*
*துன்னிய புறமொர்ழித் தாரகைச் சூழல்*
*சுடரொளி அவிந்தன குவிந்தனர் தொண்டர்*
*என்னித யத்துறை முத்தமிழ்க் கடலே*
*இன்னமுதே பள்ளியெழுந் தருளாயே"*

**(சோமசுந்தரம் பிள்ளை, திருப்பள்ளி, பா. 1)**

என்று தமிழன்னையைத் துயிலெழுப்புகின்றது சோமசுந்தரம் பிள்ளையின் இந்தப் பாடல். இதனைப் போலவே பிற பள்ளியெழுச்சிப் பாடல்களும் தமிழின் பெருமையினைச் சொல்லித் தமிழன்னையைத் துயிலெழுப்புகின்றன.

இவ்வாறு பள்ளியெழுச்சிப் பாடல்கள் அவ்வக்காலச் சூழலுக்கு ஏற்றவாறு தம்மை மாற்றிக்கொண்டு வளர்ந்துள்ளன. பொருநர்களின் கிணையிசையில் பிறந்த துயிலெடைநிலைப் பாடல்களான பள்ளியெழுச்சிப் பாடல்கள் இரண்டாயிரம் ஆண்டுகளைக் கடந்தும் இன்றும் இலக்கிய வெளியில் பயணித்துக் கொண்டிருப்பதைக் காணமுடிகின்றது.

❖ ❖ ❖

# மொழிக்கொள்கையில் தமிழகமும் தமிழ் வளர்ச்சியும்

*முனைவர் சு.குழந்தைவேல் பள்ளிச்செல்வம்*

தமிழகத்தில் மற்ற மாநிலங்களுக்கு இல்லாததொரு மொழிப்பிரச்சினை இருக்கிறது. மற்ற மாநிலங்கள் மும்மொழிக் கொள்கையைக் கடைப்பிடித்து வருகின்றன.

1. தாய்மொழி
2. ஆங்கிலம்
3. இந்தி அல்லது ஏதாவது ஓர் இந்திய மொழி

மூன்றாவது மொழியாக ஏதாவது ஓர் இந்திய மொழி எனக் கூறப்பட்டாலும் இந்தி பேசாத மாநிலங்களில் இந்திதான் மூன்றாவது மொழியாகக் கருதப்படுகிறது. இந்தி பேசாத மற்ற மாநிலங்கள் மும்மொழித் திட்டத்தைச் செயல்படுத்த தமிழகம் இதில் வேறுபடுகிறது. 1968–ல் தமிழகத்தில் இருமொழித்திட்டம் அதாவது முதலாவது மொழியாகத் தமிழும் இரண்டாவது மொழியாக ஆங்கிலமும் நடைமுறைப்படுத்தப்படும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் அரசு பிறப்பித்த ஆணையில் இவ்வாறு வரையறுத்து, தமிழ் அல்லது ஆங்கிலம் எனக் குறிப்பிடப்படவில்லை; குறிப்பிடவும் இயலவில்லை. ஒவ்வொரு மாநிலத்திலும் அந்த மாநில மொழி அல்லது வெவ்வேறு இந்திய மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்ட இந்திய குடிமக்கள் இருக்கிறார்கள். இந்திய அரசியலமைப்புப்படி ஒரு மாணாக்கனுக்குத் தன் தாய்மொழியைக் கற்கும் உரிமையைக் கல்வித்திட்டம் வழிவகுக்க வேண்டும். எனவே அரசு பிறப்பித்த ஆணை மற்ற மொழியாரின் குழந்தைகளும் தங்கள் தாய்மொழியைக் கற்க வாய்ப்பு கொடுக்கும் வகையில் முதற்பகுதி பிராந்திய மொழி அல்லது தாய்மொழி இரண்டாவது பகுதி ஆங்கிலம் என்று குறிப்பிடுகிறது.

இதனால் தமிழகத்தில் தமிழ் படிக்காமலேயே முதல் வகுப்பு முதல் பட்ட வகுப்பு வரை படித்துப் பட்டம் பெறலாம். 1968இல்

பிறப்பிக்கப்பட்ட பிராந்திய மொழி அல்லது தாய்மொழி என்று இருந்ததை மாற்றி தமிழ்நாடு அரசு 19–11–1999இல் அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ் அல்லது தாய்மொழியே முதல்மொழியாகப் பயிற்றுவிக்க வேண்டும் என்று மறுஆணைப் பிறப்பித்தது. முந்தைய ஆணையில் பிராந்திய மொழி அல்லது தாய்மொழி என்று குறிப்பிட்டதற்கு மாற்றாகத் தமிழ் அல்லது தாய்மொழி எனப்புதிய ஆணை குறிப்பிடுகிறது. இதிலும் பெரிய மாற்றமில்லை. இப்பொழுதும் தமிழைத் தாய்மொழியாகப் பெறாத மாணாக்கர் தமிழ் படிக்காமலே தங்கள் தாய்மொழியைப் படித்து, பள்ளி, கல்லூரிப் படிப்புகளை முடிக்க முடியும். நமது அரசியலமைப்புப்படி ஒரு மாணாக்கன் தன்னுடைய தாய்மொழியைக் கற்பதற்கான வாய்ப்பினை மறுக்க இயலாது. இருமொழிக் கொள்கையைக் கடைபிடிக்கும் வரை தமிழ்மொழியைக் கல்விக்கூடங்களில் அனைவருக்கும் கட்டாயமாக்க முடியாது. மும்மொழித் திட்டத்தை ஏற்றால்,

1. பள்ளிக்கல்வியில் அனைவரும் தமிழ் படிப்பதைக் கட்டாயமாக்கலாம்.
2. அலுவல் மொழியான இந்தி படிக்க விரும்புபவர்களுக்கு வாய்ப்பினை அளிக்கலாம்.
3. மற்ற மாநிலங்கள் மும்மொழித் திட்டத்தைச் செயல்படுத்துகிறது. நாம் மட்டும் தனித்து நிற்கிறோம். அதைத் தவிர்க்கலாம்.

தேசிய அளவிலும் மற்றும் மாநில அளவிலும் எத்தனையோ உயர்நிலைக்குழுக்கள் உள்ளன. இக்குழுக்களின் வல்லுநர்கள் என்று வரும்பொழுது பொதுவான குழுக்களில் ஏனைய அறிவுத்துறையைச் சேர்ந்தவர்கள் இடம்பெற்றுள்ளனர். ஆனால், தமிழ்த்துறையைச் சேர்ந்தவர்களை அதிகமாகக் காணமுடியவில்லை. தமிழ்த் தொடர்புடைய குழுவாக இருந்தாலொழிய சமுதாயத்தின் மற்ற பிரச்சினைகளோடு தொடர்புடைய எத்துனையோ குழுக்களில் தமிழ்த்துறை அறிஞர்களைப் பார்ப்பது அரிதாக உள்ளது. எக்காரணத்தாலோ அவர்கள் மொழித்துறையைத் தவிர மற்ற பிரச்சினைகளுக்குப்

பயன்படமாட்டார்கள் என்றதொரு தோற்றத்தை மாற்றி தமிழ் அறிஞர்களும் பொதுப்பிரச்சினைகளில் ஈடுபட முடியும் என்பதை மற்றவர்களுக்கு உணரச் செய்து தமிழின் நிலையை உயர்த்தி அதன் பயன்பாட்டை அடைய வேண்டும்.

மத்திய அரசு தேசிய சுவடிகள் குழு (National Commission for Manuscripts) என்ற ஒரு குழுவை உருவாக்கியிருக்கிறது. இதனுடைய கடமை இந்திய மொழிகளிலுள்ள பழஞ்சுவடிகளை அவை இலைகள், ஏடுகள், மரப்பட்டைகள், காகிதம் எனப் பல ஊடகங்களில் இருப்பதை – அடையாளம் கண்டு வகைப்படுத்திக் காப்பதாகும். எட்டு உறுப்பினர்களைக் கொண்ட இக்குழுவில் பெரும்பாலும் வடமொழிக் குடும்பத்தைச் சார்ந்தவர்களே உள்ளனர். இந்தியாவின் தொன்மையான மொழிகளில் வடமொழிக்கு ஒத்த நிலையில் தமிழ்மொழி பழஞ்சுவடிகளின் வளம்கொண்டது. அழிந்துவிட்டது போக இன்றும் ஏறத்தாழ 70,000 சுவடிகள் உள்ளன என்று கூறப்படுகிறது.

இன்று தமிழ் ஓலைச்சுவடிகளின் நிலை கவலைக்குரிய ஒன்று. ஏனெனில் ஓலைச்சுவடிகளை அதிகபட்சம் இருநூறு ஆண்டுகளுக்குள் திரும்ப எழுதவில்லையேல் அவை அழிந்துவிடும். சுவடிகளின் தொன்மையும் எண்ணிக்கையும் நமது பண்பாட்டின் அடிப்படையை உலகுக்கு அறிமுகப்படுத்துவதில் இன்றியமையாதவை. ஆதலால் தேசியச்சுவடிகள் குழுவில் தமிழறிந்த ஒருவராவது இடம்பெற்றிருக்க வேண்டும். தமிழ்ச் சுவடிகள் பற்றிய அக்கறை சிறிதும் பிரதிபலிக்காதது வியப்பையும் வேதனையையும் தருகிறது. நாம் இந்தியாவின் பண்பாட்டுப் பாரம்பரியத்தில் பல்வகை அறிவுத்துறைகளில் வடமொழியின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடவில்லை. ஆனால் தேசியச் சுவடிக்குழு என்ற ஒன்றை அமைத்து அதனுடைய உறுப்பினர் தேர்வு வடமொழி சுவடிகள் போன்று அமைக்கப்பட்டுள்ளது. இது மற்ற மொழிகளின் பயன்பாட்டிற்குத் தவறிழைப்பது மட்டுமின்றி தேசியம் என்று எண்ணுவதற்கும் பேசுவதற்கும் எதிர்மறையான போக்காகும். பாரதத்தின் பன்மையை மறப்பது அதன் வலிமையான அடிப்படையைத் தகர்ப்பதாகும். இத்தொலைநோக்கில்லாத ஆர்வலர்கள்.

தமிழகத்தில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் நாற்கர (Quadrilateral) தேசிய நெடுஞ்சாலையின் தொலைவுக்கற்களில் (Milestone) ஊர்ப்பெயர் இந்தியில் மட்டுமே எழுதப்பட்டதை 5–3–2003இல் மக்களவையில் எழுப்பப்பட்டபோது அப்போது சமாஜ்வாடி கட்சியைச் சேர்ந்த பிரபுநாத்சிங் இந்தி இந்த நாட்டின் தேசியமொழி. அதைத்தான் பயன்படுத்த வேண்டும் என்றார். இந்தி தேசிய மொழி என்று இவர் மட்டும் கூறவில்லை. பல நேரங்களில் பல தேசியத்தலைவர்கள் பல இடங்களில் கூறியுள்ளனர். இது ஐயத்திற்கு இடமில்லாத அரசியலமைப்பு அங்கீகாரம் பெற்ற உண்மை போலப் பேசப்படுகிறது. நமது அரசியலமைப்பில் தேசிய மொழி என்ற தகுதி எந்த ஓர் இந்திய மொழிக்கும் கொடுக்கப்படவில்லை. இந்திய தேசிய ஒன்றியத்து அரசு அலுவல்மொழி (The official Language of the Union) தேவநாகிரி வரி வடிவத்திலுள்ள இந்தி, இந்திய ஒன்றியத்து அரசு அலுவல் மொழியாக இருக்கும் என்று மட்டும் உள்ளது.

நமது அரசியலமைப்புப்படி இந்தி மத்திய அரசின் அலுவல்மொழி இந்தி மொழியின் கூடுதல் தகுதி இதுமட்டுமேயன்றி தேசிய மொழியன்று. தேசிய மொழி என்பது வேறு; அலுவல் மொழி என்பது வேறு. மத்திய அரசின் அலுவல்மொழி என்பது மற்ற இந்திய மொழிகட்கு இல்லாத ஒரு கூடுதல் பயன்பாட்டை மட்டும் குறிக்கிறது. ஆனால் அதனை இந்தியாவின் தேசிய மொழி என்று குறிப்பிடுவதன் மூலம் மற்ற மொழிகளுக்கு இல்லாத ஒரு புனிதத் தன்மையை அதற்குக் கொடுத்துவிடுவதுபோல் அமைகிறது. அப்படிப்பட்ட புனிதத்தன்மையை எந்த ஒரு மொழிக்கும் கொடுத்துவிடவில்லை.

நமது அரசியலமைப்பு வகுத்த பெருமக்கள் பாரதத்தின் பண்பை அறிந்தவர்கள். பழமை வாய்ந்த மொழிக் குடும்பங்களின் வரலாற்றையும் மொழிகளின் வளப்பத்தினையும் அறிந்தவர்கள். இந்திய மொழிகள் அனைத்துமே தேசிய மொழிகள்தாம். அது சிம்மாசனத்தில் தனியாக எந்தமொழியையும் உட்கார வைக்கவில்லை. இந்திய அரசமைப்பின் எந்த ஓர் இடத்திலும் தேசிய மொழி என்ற சொற்றொடர் இடம்பெறவில்லை. அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிகள் ஒரு சமுதாய சிறுபான்மையினரின்

தனித்தன்மைக்கும், உலகில் சிறுநாடுகளின் தனித்தன்மைக்கும் எதிரான விளைவுகளை உருவாக்குகின்றன. பெரும்பான்மையினரின் பழக்கவழக்கங்கள் நாளடைவில் சிறுபான்மையினரின் வாழ்க்கை, மொழி, பண்பாடு இவற்றை ஆக்கிரமிப்பதால் பெரும்பான்மையினரில் கரைந்து அடையாளத்தை இழந்து வருகின்றனர்.

ஒரு சில சடங்குகளில் மட்டுமே தங்களைச் சிறுபான்மையினராக அடையாளம் காட்டும் நிலையிலுள்ளனர். தமிழர்கள் மொரீஷியஸ், ரெயூனியன், தென்னாப்பிரிக்கா, பிஜி போன்ற நாற்பதுக்கும் மேற்பட்ட நாடுகளில் பரவி வாழ்பவர்கள் தங்கள் தாய்மொழியை (தமிழை) மறந்துவிட்டார்கள். தீ மிதித்தல், அலகு குத்துதல், காவடி தூக்குதல் போன்ற சமயம் சார்ந்த பழக்கங்களும் கோவில் வழிபாடுகளுந்தான் அவர்களைத் தமிழர்கள் என்று அடையாளம் காட்டுகின்றன.

**தமிழ் இணையப் பல்கலைக்கழகமும் தமிழ் வளர்ச்சியும்**

இருபதாம் நூற்றாண்டில் போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சி தொலைத் தகவல்தொடர்புத் துறையிலும் தகவல் தொழில் நுட்பத்திலும் ஏற்பட்ட புரட்சிகரமான மேம்பாடு, உலக வணிக வளர்ச்சி பரவலாக்கப்பட்ட கல்வி ஆகியவை சேர்ந்து இந்த உலகைச் சுருக்கிவிட்டது. இத்தகைய மாற்றத்தின் தாக்கம் ஒரு நாட்டின் சிறுபான்மையினராக வாழும் மக்களுடைய நாகரிகம் பண்பாடு மொழி தனித்தன்மை ஆகியவற்றைக் காப்பது கடினமாக உள்ளது. உப்பு, தண்ணீரில் கரைவது போல் சிறுபான்மையினரின் தனித்துவம் கரைந்து மறைந்துவிடும் ஆபத்து வளர்ந்துகொண்டே வருகிறது.

ஓர் இனத்தின் நாகரிகப் பண்பாட்டிற்கு அடிப்படைக் கொள்கலனாக இருப்பது மொழி. தன்மொழியை இழந்த இனம் தன் தனித்துவத்தை இழந்துவிடும். உலகத்தமிழர்களில் ஏறத்தாழ 20 சதவிகிதத்தினர் தமிழக எல்லைகளுக்கு அப்பால் வாழ்கின்றனர். அவர்கள் காக்கப்பட வேண்டுமானால் தமிழ்மொழியோடு தொடர்புறாது வாழவேண்டும்.

தமிழ்க்கலைகளுடனும் இலக்கியத்துடனும் உறவுள்ளதாக அவர்களுடைய வாழ்வு அமைய வேராக அமைவது மொழி. இதற்கு அவர்கள் தமிழ் கற்க வேண்டும். அவர்களுக்குத் தமிழ் கற்க வாய்ப்பு வேண்டும். இதனடிப்படையில் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டு உலகந் தழுவிய தமிழர்களை ஒன்று சேர்க்க தமிழ் பயன்படுகிறது.

*"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்*
*தமிழ்கூறும் நல்லுலகத்து"*

என்று தமிழ்பேசும் எல்லைகளைப் பனம்பாரனார் வகுத்துக்காட்டினார். வடக்கிலும் மேற்கிலும் இவை சுருங்கிவிட்டதெனினும் உலகளவில் தமிழுலகின் எல்லைகள் விரிந்துள்ளன. தமிழர்கள் இப்பொழுதுதான் முதன்முதலாகத் தமிழின் பயன்பாட்டை, தமிழ்சார்ந்த பிரச்சினையை உலகுதழுவிய ஒரு மொழியின் பிரச்சினையாகப் பார்க்கின்றனர். அவ்வாறு பார்ப்பதற்குத் தகுந்த சூழ்நிலையை உலகின் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி நமக்குத் தருகிற அதே சமயத்தில் அவ்வளர்ச்சியை நமது எதிர்கால வலிமைக்கும் வளர்ச்சிக்கும் பயன்படுத்திக் கொள்ளும் அளவிற்கு நாமும் வளர்ந்திருக்கிறோம். நாம் நமது சிந்தனைத் தடத்தைத் திருத்தி அமைத்துக் கொண்டு மொழிப்பிரச்சினையை ஒரு மாநில அல்லது தேசிய அளவுகோலுடன் பார்க்காமல் உலகக்குடிமக்கள் என்ற மனநிலையோடு வருங்காலத்தை எதிர்கொண்டு தமிழின் பயன்பாட்டைப் பெறுவது சிறப்புடையதாகும்.

ஒரு மொழியைத் தாய்மொழியாகப் பேசும் மக்கள் இருந்தால்தான் அம்மொழி உயிர்வாழும், இல்லாவிடில் வழக்கிழந்துவிடும். வளமிக்கதும் இலக்கண இலக்கியங்களைக் கொண்டதுமாகிய கிரேக்கம், இலத்தீன், வடமொழி ஆகியவற்றைப் பேசுவோர் இன்மையால் இம்மொழிகள் வழக்கிழந்துவிட்டன. உலகில் இன்று தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட 7.5 கோடி மக்களில் 1.5 கோடி மக்கள் தமிழகத்துக்கு வெளியே வாழ்கின்றனர். இவர்களில் மொரிஷியஸ், பிஜி, ரெனினியோன், தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளில் வாழும் பெரும்பாலோருக்குத் தமிழ் தெரியாது.

பிறப்பால், பாரம்பரியத்தால் பழக்கவழக்கத்தால், சடங்குகளால் தமிழர்களாக வாழ்கிற இவர்களிடையே தங்கள் வேர்கள் பற்றிய எண்ணமும் பாரம்பரியம் பற்றிய சிந்தனைகளும் மீண்டும் தங்கள் கலை, மொழி, பண்பாட்டோடு தொடர்பு கொள்ள வேண்டும்.

ஒருமொழி எந்த மாற்றத்தையும் எதிர்கொள்ள வேண்டும். இன்று உலகம் முழுவதும் பரவி வாழும் தமிழ் மக்களின் தமிழ்ப்பண்பாடு நாட்டுக்கு நாடு மாறுபட்டிருக்கிறது. எதிர்காலத்தில் இன்னும் பல மாற்றங்கள் ஏற்பட்டு தமிழுக்குச் சாதகமாகவோ, பாதகமாகவோ அமையக்கூடும் இம்மாற்றங்கள் அந்தந்த நாடுகளில் ஏற்படும் அரசியல் பொருளாதாரம் சமுதாய மாற்றங்களைப் பொறுத்திருக்கும். உலகமேடையில் நிற்கும் தனிமனிதன் தன்னை அடையாளம் காட்டிக்கொள்ள ஒரு சொந்தம் வேண்டும்; பாரம்பரியம் வேண்டும். ஒருவன் தனது தொழில், சமயம், குடியுரிமை ஆகியவற்றை மாற்றிக்கொண்டாலும் அவன் பிறந்த இனம் உடலோடும், உயிரோடும் ஒன்றியது. அந்த இன அடையாளத்திற்குத் துணையாக நிற்பது அவனுடைய தாய்மொழி இதை மாற்றிக்கொள்ள முடியாது. மாற்றினால் அது இயற்கையாக இருக்காது. ஒருவருக்கொருவர் தொடர்பின்றி மனிதசமுதாயம் உருவாக முடியாது. இத்தொடர்பு மொழியின்றி அமையாது.

இந்தியா, இலங்கை, சிங்கப்பூர் ஆகிய மூன்று நாடுகளில் தமிழ் தேசிய அளவில் அல்லது மாநில அளவில் ஆட்சிமொழியாக ஏற்கப்பட்டிருக்கிறது. குடியரசு என்பது மக்கள் பங்கேற்க வேண்டிய அரசு/ மக்களுக்குத் தெரிந்தமொழியில் ஆட்சி நடந்தால்தான் மக்களின் ஈடுபாடு முழுமையாக உருவம் பெறும். தமிழகம் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளில் ஏறத்தாழ ஆயிரத்து முந்நூறு ஆண்டுகள் பண்பாட்டு ஆதிக்கத்திற்குப் பின்னரும், தமிழ்மொழி வழக்கொழியாததும் இலக்கிய வாழ்வு பட்டுப்போகாமலும் இருப்பது வரலாற்றுச் சாதனையாகும்.

கடந்த கால வரலாறு எவ்வாறிருப்பினும் இருபத்தொன்றாம் நூற்றாண்டில் தமிழர்கள், நாட்டு ஆட்சியில் முழுமையாகப் பங்குகொள்ள வேண்டும். ஆட்சித்தமிழுக்கென ஒரு நடையும் இலக்கணமும் இலக்கியமும் உண்டு. நாடாளுமன்ற நிகழ்வுகளில்

ஆங்கிலம், இந்தி ஆகிய இருமொழிகளுடன் தமிழைப் பயன்படுத்த தடையில்லை. எனினும் பெரும்பாலோருக்குப் புரியும் ஆங்கிலத்தில்தான் தமிழர்கள், தமிழோடு ஆங்கிலம் அல்லது இந்தி கற்றிருப்பது தேவைப்படுகிறது.

இலங்கையின் சொந்த மொழிகள் சிங்களம், தமிழ் என்ற இரண்டுடன், அந்நிய மொழியான ஆங்கிலம் அலுவல் மொழியாக அங்கீகாரம் பெற்றுள்ளது. இந்தியாவில் தமிழ் தேசியமொழிகளுள் ஒன்று. ஆனால் மாநில அளவில் மட்டுமே ஆட்சி மொழி. இலங்கையில் சிங்களம், தமிழ் இரண்டுமே தேசிய அளவில் ஆட்சிமொழிகள் என்ற தகுதியைப் பெற்றிருக்கின்றன. இன்றுள்ள இனப்பிரச்சனை தீருமானால் தமிழ், இலங்கையின் ஆட்சி மொழிகளுள் ஒன்று என்ற தகுதியில் ஐக்கிய நாடுகள் அவையின் அங்கீகாரம் பெற்ற மொழியாகவும் இடம்பெறும். சிங்கப்பூரில் வாழும் தேசிய இனங்களின் தாய்மொழிகளைத் தேசிய மொழி என்ற தகுதியோடு நிறுத்தி ஆட்சிமொழியாக ஆங்கிலத்தையே பயன்படுத்தி வருகிறது. எனவே அங்கு இன்றைய நிலையில் அரசியல் மொழி, ஆட்சி மொழி என்ற தகுதியில் தமிழை எதிர்பார்ப்பதற்கு இல்லை. மலேசியா, மொரிஷியஸ் போன்ற நாடுகளில் தமிழ் அங்கீகரிக்கப்பட்ட மொழி. ஆனால் அரசியல் மொழி, ஆட்சி மொழி, என்பது வேறு மொழி. எனவே அங்கு இன்றைய நிலையில் அரசியல், ஆட்சி போன்ற துறைகளில் தமிழ் நிறைவேற்றவேண்டிய தேவை குறிப்பிடத்தக்கதாக இல்லை.

இன்று இசையில் ஆர்வம் கொண்டு கற்பவர்கள், சுவைப்பவர்கள் அதிகரித்து வருகின்றனர். அதைப் பயிற்றுவிக்கும் இசைப் பேராசிரியர்களும், இசைக்கல்லூரிகளும், கழகங்களும் செய்து வரும் அரும்பணிகள் அளப்பரியது. இதே வளர்ச்சியும் கலைத்திறனும் சுவை விருப்புடன் பழந்தமிழ் நாட்டில் நாடகம், இசை முதலான நுண்கலைகளைப் பழந்தமிழர் பேணிப் பெற விருப்போடு சுவைத்து வந்தனர். இசைக்கலையை நுணுகி ஆய்ந்து குணம், குற்றம், இலக்கணம், வழு ஆகிய வரையறைகளைக் கண்ட திறமை பழந்தமிழருக்கு இருந்துள்ளது. அதனை நோக்குமிடத்து அவர்தம் உயர்ந்த கலைவாழ்க்கையின் பண்பட்ட நிலையை அளவிடும் கருவியாக அமைகிறது. உயர்ந்த பண்பாடும் வாழ்க்கையும்

வாழ்க்கையைச் சூழ்ந்திருக்கும் கலைகளை அடிப்படையாகக் கொண்டே கருக்கொள்ளத் தொடங்குகின்றன.

உலகில் அடையாளம் காணத்தக்க அளவில், உயர்ந்த மொழிகள் அனைத்திலும் இலக்கியத்தோடு இசை, நடனம், நாடகம் ஆகியவை இருக்கின்றன. ஆங்கிலத்திற்கு இசைவளமும், நாடக வளமும் உண்டெனினும் அது ஆங்கிலம் என்று மட்டுமே குறிக்கப்படுகின்றன. பிறமொழிகளிலும் அவ்வாறே குறிக்கப்படுகின்றன. தமிழில் மட்டும்தான், அதில் இடம்பெற்றுள்ள இயல், இசை, நாடகம் எனும் மூன்றையும் முன்னிலைப்படுத்தும் வகையில் முத்தமிழ் என வழங்கப்படுகிறது. தமிழ் படிப்பவர்கள் இலக்கியத் தமிழைப் படிப்பவர்களாக இருக்கின்றார்களேயொழிய இசை, நாடகம், நாட்டியம் என்ற முத்தமிழ் அவர்களுக்குப் புறம்பாகவே இருக்கிறது. பள்ளியிலிருந்து பல்கலைக்கழகம் வரை நமது பாடத்திட்டத்தில் இசை இடம்பெறல் வேண்டும். தமிழில் பட்டம் பெற்றவர்கள் தமிழ் இசையின் நுட்பங்களைத் தெரிந்திருக்க வேண்டும். இசை, நாட்டியக்கலைகள் அனைவரையும் ஆட்கொள்ளும் திறன் வாய்ந்தவை. தமிழ் மக்களுடைய வாழ்வின் பிறப்பு தொட்டு இறப்பு வரை ஒவ்வொரு நிலையிலும் இசை இயைந்திருக்கின்றது.

தமிழ் வளர்ச்சியைத் தனிமனிதர்கள் மட்டும் செய்துவிடவில்லை. பல அமைப்புகள், சங்கங்கள், நிறுவனங்கள், அரசமைப்புகள், பத்திரிக்கைகள், பதிப்பகங்கள், இதழ்கள் போன்றவை தம்மால் இயன்றளவு அவ்வப்போது செய்து வந்துள்ளன. கவிஞர்கள் வாழ்க்கை வளர்ச்சிக்கும் வரலாற்றுத் திருப்பத்திற்கும் முன்னோடியாக விளங்குபவர்கள் தமிழகத்தின் அண்டை மாநில மொழிகளான தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளில் தமிழை மொழிபெயர்த்து விளக்காமல் ஒரே இடத்தில் உறையும் தவளைகளைப் போல் நமக்கு நாமே நம்முடைய தமிழ்ப் பெருமையோடு நிற்காது குலப்பெருமையையும் பேசிக்கொண்டு காலங்கழிப்பது கொடுமையான செயலாக இருக்கிறது. நாம் பெருமை பேசுவதும், பெருமையைப் பேசக் கேட்பதுவும் பழக்கமாகிவிட்ட பழமையே ஆகும். பழமையைப் பேண

வேண்டுவதும் போற்ற வேண்டியதும் அவசியமானதொன்றெனினும் அப்பழமையையே வழிபட்டுக் கொண்டிருக்கக்கூடாது.

### இலக்கணத்தை எளிமைப்படுத்தலும் எழுத்துச் சீர்திருத்தமும்

தொல்காப்பியம், கல்வியறிஞர்கட்கு மட்டும் புரியும்படி கடினமாக இருந்ததால் தமிழ்ப்பயிற்சி குறையலாயிற்று. தமிழுக்கு இன்றுள்ள இலக்கண நூலின் நிலையைப் பற்றி டாக்டர் அண்ணாமலை பழைய இலக்கண நூல்கள் புதிய விதிமுறைகளுக்குப் பொருந்தி வரவில்லை. புதிய இலக்கணநூல்களும் தோன்றவில்லை. பழைய விதிகள் புறக்கணிக்கப்படாமலும், புதிய விதிகள் முற்றிலும் ஏற்றுக் கொள்ளப்படாமலும் ஒரு சமூகம் இயங்குகின்ற நிலையைச் சமூகவியலார்கள் மயக்க நிலை (Anomie) என்பார்கள். புதிய தமிழைப் பொருத்தவரை இத்தகைய மயக்கநிலை இருக்கிறது.

இன்றையத் தமிழ் என்பதை வரையறுப்பது ஒரு பெரும்பணியாகும். இன்றையத் தமிழ் என்பதும், துருவப் பனிக்கட்டி போல் உறைந்து போன ஒன்றன்று. வளருவது; காலத்துக்குக் காலம் மாறுவது. அதையொட்டி இனி எழுதப்படும் இலக்கணமும் தொடர்ந்து புதுப்பிக்கப்பட வேண்டும். இலக்கணம் நேற்றைய தமிழிலிருந்து வளமுடன் இன்றையத் தமிழையும் இன்றையத் தமிழிலிருந்து உருவாகும் நாளையத் தமிழையும் இணைப்பது. தமிழில் உருவாகும் புதுமைகள் தனித்தீவாக நின்றுவிடாமல், தமிழ் மரபென்னும் கடலோடு ஐக்கியமாகச் செய்வது. ஒருமொழியானது, காப்பவர்களால் வளர்வதில்லை. அது பயன்படுத்துபவர்களால் வளர்கிறது.

ஒரு மொழிக்கு ஒலிதான் அடிப்படை. அவ்வொலியைக் குறிப்பிட நாம் அமைத்துக் கொண்டதே வரிவடிவம். காலத்துக்குக் காலம் ஒலியும், அதற்குப் பயன்படுத்தப்படும் வரிவடிவமும் மாறாது ஒரு மொழியானது அறிவியல் வளர்ச்சிக்கு இசைவான வகையில் முன்னேற வேண்டுமானால் அதன் கருத்துவளம் சிறப்படைந்தால்

போதாது. அந்த மொழியின் வரிவடிவமும் அறிவியல் மயமாக மாற்றம் பெற வேண்டும் என்று தமிழ்மொழியைத் திருத்தி அமைக்க பெரியார் கருதியதால், அதற்கு அடிப்படையாக எழுத்துச் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்றார். பின்னாளில் பெரியார் அறிமுகப்படுத்திய தமிழ்ச் சீர்திருத்தத்தைத் தெ.பொ.மீ. அவர்கள் ஒப்புக்கொண்டு இன்றைக்கு விடுதலை என்று எழுதுவதில் உள்ள லை என்ற எழுத்துமுறைதான் தொல்காப்பியர் கூறியதாகும். லை என்று கொம்புபோட்டு எழுதும்முறை பிறகு தான் வந்தது என்று குறிப்பிடுகின்றார். ஒரு மொழியைக் கற்பதற்கு அதன் எழுத்துக்களே அடிப்படை. எழுத்துக்களைக் கற்பதே சுமையாக இருந்தால் பொருளாதாரத் தேவையாக இல்லாத நாடுகளில் உள்ளோர் தமிழைக் கற்கமாட்டார்கள்.

தமிழைக் கற்பதற்கு இன்று 107 குறியீடுகளைக் கற்க வேண்டியுள்ளது.

20ம் நூற்றாண்டில் பெரியார் கொண்டு வந்த மாற்றத்தின்படி அதாவது 1979ல் பெரியார் நூற்றாண்டின்பொழுது பெரியார் பயன்படுத்தி வந்த திருத்திய வரிவடிவத்தைக் தமிழக அரசு அதிகாரப்பூர்வமாக ஏற்றது. எழுத்துச்சீரமைப்பு என்பதில் ஒரு எழுத்தைக்கூட குறைப்பதன்று. தமிழ் நெடுங்கணக்கிலுள்ள 247 ஒலி எழுத்துக்களை எழுதுவதற்குப் பயன்படுத்தப்படும் குறியீடுகளை மட்டும் இதனடிப்படையில் தமிழ் வரிவடிவத்தைக் கற்கும் சுமை குறைத்துவிடும். தமிழைக் கற்போர் 107 குறியீடுகளை மனப்பாடம் செய்வதற்குப் பதிலாக 39 குறியீடுகளை மட்டும் கற்றால் போதும்.

தமிழகத்தைத் தாண்டி உலகின் பல்வேறிடங்களில் வாழும் தமிழர்களின் வீடுகளில் தமிழ் பேசினும், தமிழைப் படிப்பதும் எழுதுவதுமான திறமை பரவாத நிலை உருவாகி வருகிறது. 39 குறியீடுகளைக் கற்றால் போதுமானது என்ற நிலையில் தமிழானது எழுதவும் படிக்கவும் எளிதாகிவிடும். அனைவருக்கும் கல்வி என்ற

தாய்மொழி கற்றல் பல்வேறு தாக்கங்களுக்குட்பட்ட காரணத்தால் இன்று பல்கலைக்கழகங்களிலே சமர்ப்பிக்கப்படும் ஆய்வேடுகளிலும், முதுநிலை பட்டப்படிப்பு படிக்கும் மாணவர்களின் விடைத்தாள்களிலும் கூட வாக்கியப் பிழைகளும், எழுத்துப்பிழைகளும் காணப்படுகின்றன. எழுவாய்க்கும் பயனிலைக்கும் இயைபு இருப்பதில்லை. வேற்றுமைகளை அதிகம் எங்கே பயன்படுத்த வேண்டும்; எந்த வேற்றுமையைப் பயன்படுத்த வேண்டும்; எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதிலே மயக்கம். எங்கே ஒற்று மிகும், மிகாது என்பதிலே குழப்பம். கட்டமைப்பு சிதைந்து தமிழாங்கில மொழியே கைவரப் பெறும் நிலை. தாய்மொழிதானே தன்னாலே கைவரப் பெறும் என்ற அலட்சியப்போக்கால் நான்கு வரிகளைக் கூட தயக்கமின்றி பேசவோ, எழுதவோ முடியாமல் திக்கித் திணறும் மாணவர்கள்.

இந்நிலைக்குக் காரணம் தமிழ்மொழி இரு முனைகளில் தாக்கத்தை எதிர்கொள்ள வேண்டியிருப்பதே ஆகும். இருமுனை தாக்கம் என்ன? அவை எவ்வாறு களையப்பட வேண்டும் என்பதற்குத் தீர்வு கண்டாலே தாய்மொழிக் கல்வி மேம்படும். அதுவே இங்கு ஆராயப்படுகின்றது.

எழுத்து மொழி கல்விக்குரிய மொழியாக மட்டுமே இன்று பயன்பாட்டில் உள்ளது. ஒரு கால கட்டத்தில் எழுத்து மொழியின் பயன்பாடு திரைப்படம், நாடகம், கடிதம், புதினம், சிறுகதை, கவிதை, வகுப்பறை உரையாடல், மேடைப் பேச்சு என்று பல்வேறு நிலைகளில் விரிந்திருந்தது. ஆனால் இன்று எழுத்து மொழியின் பயன்பாடு சுருங்கி, பேச்சு மொழியின் வீச்சு எங்கும் காணப்படுகின்றது. கடிதம், திரைப்படம், இலக்கியம், மேடைப்பேச்சு எனப்பேச்சு மொழியின் ஆதிக்கம் எல்லா நிலைகளிலும் பரந்து பட்டிருக்கின்றது. வகுப்பறைகளில் கூட ஆசிரியர் மாணவர்களுக்கான உரையாடல் பேச்சு மொழியிலேயே நடைபெறுகின்றது. எழுத்துமொழி தேர்வுமொழியாக மட்டுமே பயன்பாட்டில் உள்ளது. எனவே பேச்சு மொழியின் தாக்கம் எழுத்து மொழியில் பெரிதும் காணப்படுகின்றது.

தமிழ்மொழி சாதி, இடம், தொழில் ஆகிய காரணிகளால் சாதிய கிளை மொழிகள், வட்டாரக் கிளைமொழிகள், தொழிற்சார்

# அன்பின் ஐந்திணை : முல்லை

திரு. வி. நாகசுந்தரம்



**ஆய்ச்சி / இடைச்சி**

"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்
தான் துழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல்முகனே."

—கூடலூர் கிழார். (குறுந்தொகை 167)

*தலைவனும், தலைவியும் இல்லறம் நடத்தும் மனைக்குச் சென்று வந்த செவிலித்தாய், நற்றாயிடத்து தலைவன் தலைவி இல்லற மாண்பு கூறியது.*

**முன்னுரை :**

உலகில் முதன்முதலில் தோன்றியது மலை. அடுத்து கல்லும், மணலும் கலந்த வெப்பம் மிகுந்த மணல் வெளி. மண் பகுதியில் தோன்றியது காடு. ஆறுகளால் வளம் பெற்ற வயல்கள். ஆறு சென்று கலந்த பெரு நீர்பரப்பு கடல் என இயற்கை அமைப்பை ஒட்டி நிலங்களைப் பண்டைத் தமிழர்கள் பாகுபாடு செய்தனர்.

மழை தவழும் மலைச் சாரலிலே பல்வேறு பூக்கள் மலர்ந்த போதும் அவற்றுள் தேன் நிறைந்த பூவான குறிஞ்சிப்பூவே சிறப்புப் பெற்றிருந்தது. அதனால் மலையும், மலை சார்ந்த இடமும் குறிஞ்சி எனச் சுட்டப்பட்டது. இதே போன்று மற்ற நிலப்பகுதிகளும் அதனதனிடத்திலே உள்ள ஒரு சிறப்பான பூவினைக் கொண்டே அதனதன் பெயர்களாகப் பெறலாயின. மலையும், காடும் மயங்கிய வெப்பம் மிக்க மணற்பகுதியில் உயர்ந்து வளர்ந்த பாலைமரங்கள் நிறைந்திருந்தமையால் மணலும், மணல் சார்ந்த இடமும் பாலை நிலம் எனப் பெயர்பெற்றது. முல்லையும், குறிஞ்சியும் முறைமையின் திரிந்து நல்இயல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்தப் பாலை என்பதோர் படிவம் கொள்ளும் (சிலம்பு) காடுகளில் வளர்ந்த முல்லைக் கொடிகள் தம் வெள்ளை மலர்காட்டி அங்கு வருவோர்க்கு இன்பமணம் ஊட்டியதால், காடும், காடு சார்ந்த இடமும் முல்லை நிலம் என்ற சிறப்புப் பெயர் பெற்றது. நெல்லாலும், கரும்பாலும் அழகு பெற்ற வயல்களில் வேலை செய்வோர்க்கு மருத மரத்தின் நிழல் மகிழ்வூட்டுவதாக அமைந்ததால், வயலும், வயல்சார்ந்த இடமும் மருதநிலம் எனச் சொல்லப்பெற்றது. கடற்கரையை அடுத்துள்ள உப்பங்கழிகளில் குவளை, ஆம்பல் போன்ற பல்வேறு மலர்கள் மலர்ந்திருந்தபோதிலும், நெய்தல் மலர்த் தொகுதியானது தன் பசிய இலைகளுக்கு மேலே தலைதூக்கி நின்று மகளிரது மையுண்ட கண்களைப் போல் மாட்சிமைபெற்று, அக்கழிகளை அழகு செய்ததால் கடலும், கடல் சார்ந்த இடமும் நெய்தல் நிலம் என்ற பெயர் பெற்றது. இவ்வாறு நிலத்தைப் பாகுபாடு செய்து அதனதன் மணம்மிக்க மலரின் பெயராலேயே அழைத்தபெருமை, உலகின் வேறு எந்த நாட்டார்க்கும், எந்த மொழியைச் சேர்ந்தவர்களுக்கும் இல்லாது, தமிழர்கட்கு மட்டுமே உள்ள தனிப்பெரும் பெருமையாகும்.

"மாயோன் மேய காடுறைஉலகமும்
சேயோன் மேயமைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லைக் குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையாற் சொல்லவும்படுமே"

என்று நானிலப் பாகுபாட்டைக் கூறும் தொல்காப்பியர் முல்லையை முதலில் வைத்தே பாடுகின்றார். முல்லையை முதலில் வைத்ததற்குக் காரணம் கூறும் நச்சினார்க்கினியர், இவ்வொழுக்கமெல்லாம் இல்லறம் பற்றிய ஒழுக்கமாதலின் கற்பொடு பொருந்திக் கணவன் சொல் பிழையாது இல்லிருந்து நல்லறம் செய்தல் மகளிரது இயற்கை முல்லையாதலின் அது முதற் கூறப்பட்டது. எனவே 'முல்லை' என்ற சொல்லுக்குப் பொருள் இருத்தலாயிற்று என்று விளக்குவார்.

முல்லைக்குரிய பெரும்பொழுதையும், சிறுபொழுதையும் வரையறுக்கும் தொல்காப்பியர், "காரும், மாலையும் முல்லை" என்று கூறுகிறார்.

கார்காலமாவது மழைபெய்யுங்காலம். அஃது ஆவணித்திங்களும், புரட்டாசித் திங்களும் மாலையாவது இராப்பொழுதின் முற்கூறு என்பது இளம் பூரணம். முல்லைக்குரிய உரிப்பொருளான இருத்தலைப்பற்றி நச்சினார்க்கினியர் இனித் தலைவி பிரிவுணர்த்திய வழிப் பிரியார் என்றிருத்தல், பிரிந்துழிக் குறித்த பருவம் அன்றென்று தானே கூறுதல், பருவம் வருந்துணைபும் ஆற்றியிருந்தமை பின்னர்க் கூறுவன ஆகியவை இருத்தல் என்று விளக்குவார்.

பொதுவாகக் கருப்பொருள்களாகக் கருதப்படுபவை இவை என்று தொல்காப்பியர் விளக்குகிறாரேயன்றி ஐந்திணைகளுக்கும் உரியவை இவை என்று அவர் வகுக்கவில்லை. உரையாசிரியர்களே அங்ஙனம் விளக்கியுள்ளனர். மேலும் தொல்காப்பியர்,

# ஆசிரியர் குழு


திரு. இரா. குருசாமி

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா



தொடர்பு முகவரி :

**ஆசிரியர், செந்தமிழ்,**
**மதுரைத் தமிழ்ச்சங்கம்,**
**மதுரை-625001.**

தொலைபேசி : 0452-6575615



பதிப்பாசிரியர் : **இரா. அழகுமலை**, எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.
தொலை பேசி : (0452) 6575615

அச்சிடுவோர் : [illegible] பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை - 1.

RNI Regd. No.: 5508/56 August 2009



# செந்தமிழ்க் கல்லூரி
## மதுரைத் தமிழ்ச் சங்கம்

(தேசிய தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் தேசிய தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

**54, தமிழ்ச்சங்கம் சாலை, மதுரை - 1.**
**தொலைபேசி 0452-2343707. நகரி 0452-4373475**

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வு பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புகள் உள்ளன.**

| இரா. அழகுமலை<br>செயலாளர்<br>மதுரைத் தமிழ்ச் சங்கம் | முனைவர் க. சின்னப்பா<br>முதல்வர்<br>செந்தமிழ்க் கல்லூரி | இரா. குருசாமி<br>செயலாளர்<br>செந்தமிழ்க் கல்லூரி |
|---|---|---|

அனுப்புநர்,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை- 625001.

From,
Secretary,
Madurai Tamilsangam,
Madurai - 625001.
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To, [redacted]

Printed by V.Govindarajan, published by R.ALAGUMALAI on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West masi Street, Madurai-1, and published at 54, Tamil sangam road, Madurai. Editor R. ALAGUMALAI.